விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 30 சனிக்கிழமை (15.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332


SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்திய அரசு ஏமாந்து விடக் கூடாது



## கலைஞர் கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலைப்புலிகளை அழிக்கின்றேன் என்று கூறிக் கொண்டே அங்கேயுள்ள தமிழர்களையும் அழிக்கத் திட்டமிடுகின்றார். அதற்காகவே இந்திய அரசிடம் கெடு கேட்கின்றார். இதை மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். அவரிடம் ஏமாந்து விடக் கூடாது என்று தமிழக முதல்வர் கருணாநிதி கூறியிருக்கின்றார்.

நேற்று முன்தினம் இலங்கை ஜனாதிபதி புதுடில்லியில் இந்தியப் பிரதமருடன் பேசிய பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் குறித்து நேற்றுத் தமிழக சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அதன்போதே கருணாநிதி இதனைத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளியுறவு அமைச்சராக ஹிலாரி கிளின்டன்?

(சிகாகோ)

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற பராக் ஒபாமா நிர்வாகத்தில் ஹிலாரி கிளின்டன் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனநாயகக் கட்சியில் அதிபர் பதவி வேட்பாளருக்கான தேர்வில் பராக் ஒபாமாவுக்குக் கடும் போட்டியாக விளங்கியவர் ஹிலாரி. தனது நிர்வாகத்தில் நியமிக்கப்பட வேண்டிய நபர்கள் குறித்து ஒபாமா தீவிரமாக ஆலோசித்து வருகின்றார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசிலிருந்து வெளியேறுவோம் என ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

மகிந்த சிந்தனையில் ஒழுங்குகளை மீறினால் தாம் அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாக ஜாதிக ஹெலஉறுமய எச்சரித்துள்ளது.

இந்த முடிபை ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க உட்பட்டோர் அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருக்கு உணர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு அரசாங்கம் அமைக்கப் போகும் பாரிய கூட்டமைப்புக்கான ஒரு கட்டமாக நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றின்போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யும் நோக்கம் எதுவும் அரசாங்கத்திற்கு இருக்கக் கூடாது எனக் ஹெல உறுமய கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் சுட்டுக்கொலை

### வாகனச் சாரதியும் பலி

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சி.சந்திரகாந்தனின் பிரத்தியேக செயலாளர் உட்பட இருவர் கொழும்பு அத்துருகிரியவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான வாகனத்தில் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அத்துருகிரிய ஒருவலப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர (12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரன் சரணடைந்தால் இந்திய அரசு தலையிடும்

## காங்கிரஸ் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் நிபந்தனையின்படி விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சரணடைந்தால் அங்கு போரை நிறுத்துவது பற்றி ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் பேசுவார் என்று இந்தியக் காங்கிரஸ் கட்சியின் கொறடா சி.ஞானசேகரன் கூறினார்.

போரை நிறுத்த முடியாது என்று டில்லியில் ஜனாதிபதி ராஜபக்ஷ வியாழக்கிழமை கூறியதையடுத்து இந்திய அரசு இனி என்ன செய்யப் போகின்றது என எதிர்க்கட்சிகள் சட்டப் பேரவையில் நேற்றுக் கேள்வி எழுப்பின.

அப்போது பேசிய இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் வை.சிவபுண்ணியம், இப்பிரச்சினையில் தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டு விடாமல் மத்திய அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இதையடுத்து ஞானசேகரன் பேசியதாவது, தமிழகம் கொந்தளிக்கும் என்ற வார்த்தையை இங்கு பயன்படுத்தினார்கள். இலங்கை தனிநாடு. அதற்கென இறையாண்மை உண்டு. மத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

பிம்ஸ்ரெக் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மாலை நாடு திரும்பினார்.

மூன்று நாள்கள் கொண்ட இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங், நேபாளப் பிரதமர் ஆகியோருடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதுடன் வறுமையை ஒழிக்கவும் ஜனாதிபதி முன்னெடுக்கும் செயற்றிட்டம் குறித்து ஏனைய அரசுத் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-3)

## பாதுகாப்பு உத்தரவாதத்தினை அடுத்து செஞ்சிலுவைச் சங்கம் மீண்டும் பணியில்

(கொழும்பு)

பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக மூடப்பட்டிருந்த ஓமந்தை பாதை மீண்டும் நேற்று திறக்கப்பட்டது. ஓமந்தைக் கடவையை மூடும் தீர்மானம் ஏன் மேற்கொள்ளப்பட்டது தற்போது ஓமந்தைக் கடவையின் உண்மையான சூழ் நிலையாது என செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பேச்சாளர் அலெக்ஸ்ஸாண்டரா மட்டியே விக்கி கூறியதாவது,

ஆயுத மோதல் காரணமாக நிலவுகின்ற பாதுகாப்பற்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நேற்று 14ஆம் திகதி எமது அலுவலகர்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் மீண்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஓமந்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையத்திலுள்ளோர் தொற்று நோய்களால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)


வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்கள் தொற்றுநோய்க்குள்ளாகி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கதீயா நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இந்த மக்கள் சிரங்கு, சின்னமுத்து ஆகிய தொற்றுநோய்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் 4 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கான சிகிச்சைகளை யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார். இந் நலன்புரி நிலையத்தில் 63 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வன்னியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



யாழ்.மத்திய கல்லூரியில் நீச்சல் தடாகம் அமைப்பதற்கான ஆரம்ப வைபவத்தில் 512ஆம் படையணியின் யாழ்.நகரத் தளபதி பிரிகேடியர் ஆர்.குலதுங்க உட்பட விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்படுவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அத்திபாரக் குழியில் நவதானியம் விதைப்பதையும் படங்களில் காணலாம்.

# இந்தியப் பொருட்கள் வரும்போது விலைகள் பன்மடங்கு குறைவடையும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து பொருட்களைகொண்டு வரும் தனது திட்டம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும், அவ்வாறானதொரு நிலையில் குடாநாட்டில் அத்தியாவசியப்பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களினதும் விலைகள் பல மடங்கு குறைவடையும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் புதியதொரு சகாப்தத்தை உருவாக்கும் நோக்கத்தை முன்வைத்து பல்வேறு துறைகளில் துரித அபிவிருத்தி நடவடிக்கைகளை தான் முன்னெடுத்து வருகின்ற இவ்வேளையில் அனைத்துத் தரப்பினரும் இதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டியது மனிதாபிமான அவசியமாகும் என சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் சம்மேளனங்களினதும் பிரதிநிதிகளையும் அரச உயர் அதிகாரிகளையும் பொது மக்களையும் தொடர்பு கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குடாநாட்டில் ஒரு கிலோ அரிசியை 90 ரூபாயிற்கு வழங்கும் திட்டத்தை உடன் ஆரம்பிக்குமாறும், இதற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கி மக்கள் நலன் சார்ந்து செயற்பட முன்வரவேண்டும் என்றும் நுகர்வோரையும் விநியோகஸ்தர்களையும் பாதிக்காத வகையிலேயே தான் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கடந்த கால தவறுகளைப் போல் அல்லாமல் எதிர்கால மக்கள் நலன்கருதி புதிய சகாப்தத்தை உருவாக்கும் தனது வேலைத் திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வெகு விரைவில் வரி விலக்குடன் இந்தியாவில் இருந்து பொருட்களைக் கொண்டு வரும் தனது திட்டம் ஆரம்பிக்கப்படுமென்றும் அவ்வாறானதெரு நிலையில் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களினதும் விலைகள் பல மடங்கு குறைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

(எ)

# ஜெயானந்தமூர்த்தி எம்.பியிடம் இரகசியப் பொலிஸார் விசாரணை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியிடம் இரகசியப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் 2 மணியிலிருந்து 2 மணித்தியாலங்களாக வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

அண்மையில் அவர் ஜேர்மனியில், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் வெளியிட்ட கருத்துத் தொடர்பிலேயே இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாம் ஜேர்மனியில் பொங்குதமிழ் உற்சவத்தின்போது தெரிவித்த கருத்துக்கள் குறித்தே வாக்குமூலம் பெறப்பட்டதாக ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

வாக்குமூலத்தை பெற்றுக்கொண்ட இரகசியப் பொலிஸார் தேவைப்படின் மீண்டும் வாக்குமூலத்தை பெற்றுக் கொள்வதாக தம்மிடம் தெரிவித்துச் சென்றதாகவும் ஜெயானந்தமூர்த்தி குறிப்பிட்டார். இதேவேளை ஜெயானந்தமூர்த்தி அண்மையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களிற்குச் சென்று வந்த பின்னர் தமிழீழமே தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைத் தரும் என்ற கருத்தை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து தென்னிலங்கையில் பாரிய பிரச்சினையாக பேசப்பட்டு வருகிறது. நாடாளுமன்றத்தில் அவர் தெரிவித்த கருத்தைக் கொண்டு அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கமுடியாது என்ற காரணத்தினாலேயே ஜேர்மனியில் அவர் தெரிவித்த கருத்துத் தொடர்பில் காவல்துறையினரால் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. (ச-5)

# பால்மாவின் விலை டிசம்பரில் குறைப்பு

டிசம்பர் மாதம்15ஆம் திகதி முதல் பால் மாவின் விலை குறைக்கப்படுமென்று வர்த்தக சந்தை அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்நாட்டுப் பால்மா உற்பத்தியாளர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின்போது இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

உலக சந்தையில் பால்மா விலை குறைந்துள்ளதாகவும் இதன் பயனை மக்கள் அடைந்து கொள்ளும் முகமாகவே பால்மா விலை குறைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் விற்பனையாகும் ஒவ்வொரு 400 கிராம் பால்மா பைக்கற்றுக்கும் 2 ரூபாய் 50 சதம் வீதம் அறவிட்டு அதன் மூலம் கிடைக்கும் நிதி தேசிய பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ச)

# புத்தக வெளியீடு

யாழ். பல்கலைக்கழக ஆங்கிலபாட விரிவுரையாளர் வி.பரந்தாமன் எழுதிய **'Study package to GCE A/L English Literature'** புத்தக வெளியீட்டு விழா ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். பல்கலைக் கழக ஆங்கிலத்துறை தலைவர் எஸ்.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக ப்லகலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்கிறார் கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

இப்புத்தகத்தை யாழ்.பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஏ.சிவபாலன் வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை ஓய்வு பெற்ற தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.பேரம்பலம் பெற்றுக் கொள்வார்.

மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் எஸ்.பத்மநாதன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் ஆர்.கைலைநாதன், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆங்கில ஆசிரியர் எஸ்.சிறீராஜ்குமார் ஆகியோரும் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி வி.எம்.யோகரட்ணம், சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆங்கில ஆசிரியர் திருமதி சி.இராமகிருஷ்ணன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-6)

## சுகாதார முகாமைத்துவ உதவியாளர்

# நேர்முகப் பரீட்சைக்கு மேலும் 17 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கு மேலும் 17 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு,

தனபாலசிங்கம் ஜெயரூபா (நீர்வேலி மேற்கு), சுந்தரலிங்கம் பிரதீபன் (தாவடி), சின்னராசா வினோஜிதா (கோண்டாவில் வடக்கு), கிருஸ்ணராஜா பிருந்தாவன் (நெல்லியடி கிழக்கு), ராஜா ஜீவிதா (மட்டுவில் வடக்கு), சிவகுமாரன் வைத்தியதாசன் (மீசாலை கிழக்கு), தர்மகுலசிங்கம் பார்த்தீபன் (கரணவாய்), யோகேந்திரன் சசிரேகா (கே.கே.எஸ்.வீதி),

யோசெப்குமார் சங்கீதா (கட்டைப்பிராய்), ஜெசிக்கா நித்தியானந்தன் (வண்ணார்பண்ணை), கனகரட்ணம் கிரிதரன் (நல்லூர்), செல்வநாயகம் சர்மிளா (இணுவில் மேற்கு), சுந்தரகாந்தன் வைதேகி (உரும்பிராய் வடக்கு), சதாசிவம் வனஜா (தும்பளை மேற்கு), விவேகானந்தன் நிரஞ்சனி (அல்வாய் மேற்கு), விஜயரட்ணம் வரோசன் (நல்லூர் வடக்கு), நல்லையா நேசமீரா (கொடிகாமம்). (ச)


கரித்தாஸ் கியூடெக்கின் தலைமைச் செயலகமான இலங்கை கரித்தாஸ் செயலகத்தின்

40 வது ஆண்டு நிறைவு விழா



கியூடெக்-கரித்தாஸ்

(C-1779)

பிரதம விருந்தினர்
வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர்-யாழ்ப்பாணம்
சிறப்பு விருந்தினர்கள்
செல்வி சா.நிக்கொலின்
இயக்குநர், IOM
திரு.திருமதி ஆ.சிவானந்தன் மயூரி
மாவட்ட அலுவலர்
ஐக்கிய நாடுகள் உணவு விவசாய நிறுவனம்

*காலம்:* நவம்பர் 15 -2008
*நேரம்:* காலை 10.00 மணி
*இடம்:* கலைத்தூது கலையகம்
இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.

*அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்*
இயக்குநர்,ஊழியர்கள்.

இல.14,மத்தியூஸ் ரோட், தியோகு வீதி, யாழ்ப்பாணம், இலங்கை. தொ.பே. 021 222 257, 021 222 8050

## இன்று ஒரு தகவல்

### சாத்தானின் குரல்

கடலில் படகொன்று போய்க்கொண்டிருந்தது. அந்தப் படகில் ஒரு பெரியவர் (சாது) உட்கார்ந்திருந்தார். அதில் பயணம் செய்த சிலர் அந்த சாதுவை கேலி-கிண்டல் பண்ணுவதும் அவர் மௌனமாக இருக்கும்போது சத்தம் போட்டு அவரை குழப்புவதுமாக இருந்தனர்.

இவர்களின் தொந்தரவுகளால் கொஞ்சமும் கவலைப் படாத அந்தப் பெரியவர் அவர் பாட்டுக்கு பொறுமையாக வந்துகொண்டிருந்தார்.

மிகவும் இருட்டி விட்டது. கண்ணைமூடி தியானத்தில் இருந்தார் அவர். இதைப் பார்த்த ஒருவன் "டேய் இதுதான் நாம் வம்பு வளர்க்க சரியான நேரம்" என்றான். உடனே எல்லோரும் அவரைப் பற்றிக் கிண்டல் செய்தார்கள், கூச்சலிட்டார்கள்.

ஆனால் அவர் கவனம் திசை திரும்பவே இல்லை. கீழே கிடந்ததையெல்லாம் எடுத்து அவரின் மீது எறிந்தார்கள்.

அப்பொழுதும் அவர் அசையாமல் இருந்தார். ஒருவன் கீழே கிடந்த காலணியை எடுத்து அவரின் தலையில் அடித்தான்.

அவர் முகம் அன்பாகவே இருந்தது.

இந்தச் சமயத்தில் ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரி கேட்டது.

"என்னுடைய அன்புக்குரியவனே... நீ விரும்பினால் இந்தப் படகை நான் கவிழ்த்து விடுகிறேன்" என்றது அந்தக் குரல்.

இப்பொழுதும் அந்த சாதுவின் தியானம் கலையவில்லை. ஆனால் அவரைக் கேலி செய்தவர்களும் அவருக்கு அடித்தவர்களும் இந்தக் குரலைக் கேட்டு பயந்து விட்டார்கள்.

இவர் சரியென்று சொல்லிவிட்டால் நமது கதி என்ன ஆகும்? என்று யோசித்துப் பார்த்தார்கள்.

உடனே அந்தப் பெரியவரின் காலில் விழுந்தார்கள். "ஐயா.... எங்களை மன்னித்துவிடுங்கள். ஏதோ தெரியாமல் தப்பு பண்ணிவிட்டோம்" என்றார்கள்.

சாது தியானம் முடிந்து மெதுவாக கண்ணைத்திறந்து பார்த்தார். எல்லோரும் சுற்றிவர பயந்த முகத்துடன் நின்று கொண்டிந்தனர். உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிந்தது.

அவர்களைப் பார்த்த அந்தப் பெரியவர் கவலைப் படாதீர்கள் என்று அவர்களை அமைதிப்படுத்தினார்.

அதற்குப் பின் நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தார். வானத்தை நோக்கி கைகளை உயர்த்தி, "என் அன்பான கடவுளே ! நீ எதற்காக சாத்தானின் மொழியில் பேசுகிறாய்! நீ கவிழ்த்து விளையாடவேண்டும் என்று நினைத்தால் அதற்காக இந்தப் படகை கவிழ்க்க வேண்டாம் ! நீ புரட்டித் திருப்ப வேண்டியது இந்தப் படகை அல்ல. இந்த மனிதர்களுடைய புத்தியை" என்றார்.

உடனே ஆகாயத்திலிருந்து பதில் வந்தது.

"என் அன்புக்குரியவனே... நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீ சரியான உண்மையைப் புரிந்து கொண்டாய். கொஞ்ச நேரத்திற்கு முன் ஒலித்தது எனது குரல் அல்ல. அது சாத்தானின் குரல். எவன் ஒருவன் சாத்தானின் குரலைப் புரிந்து கொள்ள முடியுமோ அவன் மட்டுமே என்னுடைய குரலையும் புரிந்துகொள்ளமுடியும்" என்றது அந்தக்குரல்.

இது ஓஷோ என்ற பெரியவர் சொன்ன கதை.

சிலசமயம் நமக்கு நல்லது செய்வது போல் சிலபேர் புத்தி சொல்வார்கள். யோசனை கூறுவார்கள். அது சாத்தானின் குரல். அதன்படி நடந்தால் நாம் வம்பில் மாட்டிக் கொள்வோம். எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஒருநாள் இரவு கடவுளே எனக்கொரு வரம்கொடு என்று வேண்டினான் ஒருவன்.

உடனே ஒருகுரல்: "என்ன வேண்டும் கேள்" என்றது. ஊருக்குப்போயிருக்கும் என் மனைவி நாளைக்குத் திரும்பி வருவதாக கடிதம் போட்டிருக்கிறாள். தயவு செய்து "அவள் நாளைக்கு இங்கு வராதபடி பார்த்துக்கொள்" என்றான்.

"அவ்வளவுதானே... கவலைப்படாதே... நாளைக்கு நிச்சயமாக அவள் இங்கு வரமாட்டாள். ஏனென்றால் இன்றைக்கே வந்துவிட்டாள்!" என்று குரலை மாற்றிப் பேசிக்கொண்டு மாடியிலிருந்து இறங்கி வந்தார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம்

யாழ். விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கைதடி விவசாய போதனாசிரியர் பிரிவில் 8 தலைப்புகளின் கீழ் போட்டியிட்டு வெற்றியீட்டிய சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கைதடி பராசக்தி முன்பள்ளி மண்டபத்தில் கைதடி விவசாய போதனாசிரியர் ஆ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னை அபிவிருத்திச் சபை பிராந்திய முகாமையாளர் வல்லிபுரம் மகாலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், தென்மராட்சி உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி இரகுநாதன் கௌரவ விருந்தினர் களாக கைதடி கமநல அபிவிருத்தி நிலைய பெரும்பாக உத்தியோகத் தர் வை. பாலகிருஷ்ணன் தென்மராட்சிப் பிரதேச சூழல்பாதுகாப்பு உத்தியோகத்தர் அ.உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

இவ்விழாவில் விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்ப தகவல்கள் காட்சிப்படுத் தப்படவுள்ளதுடன் அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் றுவான் இனசோள விதையும் திஸ்ஸ இனநிலக் கடலை விதையும் விற்பனை செய்யப்படவுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்று கௌரவிக்கப்படவுள்ள விவ சாயிகளின் பெயர் விபரம் வருமாறு:

**நெல் உற்பத்தியாளர்:** க. சந்திரன்-நாவற்குழி கிழக்கு, க. மனோகரன்-கைதடி நாவற்குழி, வீ. சிவசுப்பிரமணியம்-கைதடி தெற்கு,

**சேதனப் பண்ணையாளர் :** வ.மகாலிங்கம் -சந்திரபுரம், வே.அருமைராசா-கைதடி கிழக்கு, ஆ. இராஜரட்ணம்- கைதடி கிழக்கு,

**சுயவிதைநெல் உற்பத்தியாளர் :** தங்கவேலு -நாவற்குழி கிழக்கு, க. செல்வராசா -கைதடி நாவற்குழி, செ. லோகீஸ்வரன்-மட்டுவில் தெற்கு,

**ஒருங்கிணைந்த பண்ணையாளர்:** சி. சிவராசா-சந்திரபுரம், நா.கனகேஸ்வரன்-கைதடி கிழக்கு, சி. சிவனேஸ்வரன்- மட்டுவில் மத்தி,

**பெண் தலைமைத்துவ விவசாயி:** ந. பரமேஸ்வரி-கைதடி மத்தி, கி. சின்னம்மா-கைதடி கிழக்கு, கு. சிவநாயகி -சந்திரபுரம்,

**சோளச் செய்கையாளர்:** சி.பரமசாமி-கைதடி தெற்கு, சி. நித்தியானந்தன்-கைதடி மேற்கு, த. புஸ்பராணி-கைதடி மேற்கு,

**நிலக்கடலைச் செய்கையாளர்:** சி. திருநாவுக்கரசு-கைதடி மத்தி, சி. கஜேந்திரன்-கைதடி வடக்கு, வே. பாண்டியர்-கைதடி தெற்கு,

**குரக்கன் செய்கையாளர்:** ச. சுப்பிரமணியம்-கைதடி வடக்கு, சே. செல்லத்துரை-கைதடி கிழக்கு, மு. கந்தசாமி- கைதடி தெற்கு. (ஓ-4-29)

# இலங்கைப் பிரச்சினையில் தமிழகம் தலையிடுவதற்கு அரசாங்கமே சந்தர்ப்பம் வழங்கி உள்ளது

## மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம்

இலங்கை பிரச்சினையில் தமிழகத்தை தலையிட வைக்கும் அளவிற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் தமிழக சட்டசபையில் இலங்கையில் யுத்தத்தை நிறுத்துமாறு கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை அவர் சுட்டிக் காட்டினார்.

கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதை அடுத்து அங்குள்ள முஸ்லிம்களின் அபிலாசைகள்பூர்த்திசெய்யப் பட்டுள்ளதாக பிழையான எண்ணம் ஏற்பட்டுள் ளதாக அவர் குறிப்பிட்டார். கிழக்குமாகாணத்தில்முஸ்லிம்கள் தமது வயல்களுக்கு செல்ல அனுமதிக்கப் படுவதில்லை என அவர் குற்றம் சுமத்தினார்.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப் படுவது அவசியம் என ஹக்கீம் வலியுறுத்தினார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சர்வகட்சி குழுவில் பங்கேற்றால் மாத்திரம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட் டு விடாது என அவர் சுட்டிக்காட்டினார். பிரச்சினைக்கு தீர்வுகான முதலில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

அரசாங்க அமைச்சர்கள் இன்று சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர். எனினும் பிரதம நீதியரசருக்கு வீட்டு வாடகை கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவே வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். (ஓ-6)

## இராசி பலன்

15.11.2008
(ஐப்பசி 30 , சனிக்கிழமை)
துதியை முற்பகல் 8.31மணிவரை
ரோகினி முற்பகல் 9.12 மணிவரை
இராகுகாலம் 9.07-10.37மணிவரை
சுபநேரம் 3.07-4.37 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, அதிக பிரயாணம், அமைதிக்குறைவு, பணவிரயம். |
| இடபம் | தெய்வ சிந்தை, ஜனவசியம், புதிய பொருள் சேர்க்கை, உடல்நலம். |
| மிதுனம் | வீண் அலைச்சல், முயற்சி தாமதம் , சுபசெலவு, ஆரோக்கியம். |
| கடகம் | கலந்துரையாடல், மனமகிழ்ச்சி, தொழில் சிரத்தை, ஆரோக்கியம். |
| சிங்கம் | உற்சாகம், தொழில்சிந்தை, முயற்சி கைகூடும், போசனசுகம். |
| கன்னி | உடல் உழைப்பு, ஆன்றோர் சந்திப்பு, பித்தரோகம், முயற்சி தாமதம். |
| துலாம் | ஆரோக்கியக்குறைவு, அபகீர்த்தி , காரிய தாமதம், அச்சம். |
| விருச்சிகம் | வாகன வசதி, உஷ்ணநிலை, காரியஅனுகூலம், குடும்பசுகம். |
| தனுசு | திடீர் பயணம், அதிகாரம், தொழில் சிந்தை, பணப்புழக்கம். |
| மகரம் | தாழ்ந்தசுபாவம், பூர்வபுண்ணிய கருமம், முயற்சிதாமதம், திடீர் நன்மை. |
| கும்பம் | மனச்சஞ்சலம், வாகன சுகம், சுபசெலவு ,காரிய தாமதம். |
| மீனம் | புதியபொருள் சேர்க்கை, காரிய நன்மை, போசனசுகம், வாக்கு மேன்மை. |

வளவன்

## மாணவர் கௌரவிப்பு

(மருதங்கேணி)

புலோலி ப.நோ.கூட்டுறவுச் சங்கம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய புலோலி ப.நோ.கூ. சங்க பிரதேசத்திற்குட்பட்ட 8 பாடசாலைகளைச் சேர்ந்த 42 மாணவர்களை கௌரவிக்கும் விழா சனிக்கிழமை காலை 9 மணிக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் ந. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ. வரதீஸ்வரன், பருத்தித்துறை மக்கள் வங்கி கிளை முகாமையாளர் மு.சிவனேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-35)

## உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள்

யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் F.F.S.L அமைப்பினால் யாழ். மாவட்ட பாடசாலைகள் மட்டத்தில் நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டப் போட்டி தொடரின் இறுதியாட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணி தொடக்கம் யாழ். மத்திய கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். கிளிபேட் அந்தனிப்பிள்ளை B.A தலைமையில் நடைபெறவுள்ள இறுதி ஆட்டங்களை F.F.S.L ன் Youth Co-ordinater பேட்டி பனிஸ்ரர் நெறிப்படுத்துவார்.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தற்காலிக உடற்கல்வி பயிற்றுனர் கே.கணேசநாதன் சிறப்பு விருந்தினர்களாக தொழில் அதிபர் கஜமுகன் ஸ்தாபனத்தின் உரிமையாளர் E.S.P நாகரத்தினம் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் செயலாளர் ரி.வரதராயனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

போட்டியில் பங்குபற்றும் அணிகள் வருமாறு: **15வயதுப் பிரிவு** - மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் நாவாந்துறை சென்ஜேம்ஸ் ம. வித்தியாலயம். தேவரையாளி இந்து எதிர் சென்.சாள்ஸ் ம. வித்தியாலயம்

**13வயதுப் பிரிவு** மானிப்பாய் இந்து எதிர் நாவாந்துறை றோ.க. பாடசாலை. யாழ். மத்திய கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக்கல்லூரி. (ஓ-10)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(வட்டுக்கோட்டை)

வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள அதிபர்களுக்கான பரீட்சை மற்றும் அதற்கான தயார்படுத்துதல் தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி பரீட்சைக்கு தோற்றும் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பரீட்சைக்கான ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (ஓ-27)

## தீவக லயன்ஸ் கழகத்தின் மாபெரும் சேவைத்திட்டங்கள்

தீவக லயன்ஸ் கழகம் அதன் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.ஜெயவத்சலன் அனுசரணையுடன் நடாத்தும் மாபெரும் சேவைத்திட்ட நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய தொண்டர் திருநாவுக்கரசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆளுமை விருத்திக்கான வேலைப் பட்டறை,பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கல், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்தல், விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்ட உள்ளீடுகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## கல்வித் தின விழா

(சாவகச்சேரி)

யுனிசெவ் அனுசரணையுடன் நடாத்தப்படும் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் கல்வித்தின விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8மணிக்கு பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மட்டுவில் கொத்தணியைச் சேர்ந்த 10 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. (ஓ-29)

## மகரஜோதி விழா விரத ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மட ஐயப்ப மணிகண்ட சபையின் 11 ஆம் ஆண்டு மகரஜோதி விழா விரத ஆரம்பமும், "ஸ்ரீ மணிகண்ட நாதம்" புத்தக வெளியீட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை கந்தர்மடம் அரசடி வீதி, செட்டியன்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் காலை 11.00 மணிக்கு வெளியிடப்படவுள்ள ஸ்ரீ மணிகண்ட நாதம் எனும் நூலில் ஐயப்ப மகிமை, தியான அஷ்டோத்திரங்கள், வைரவப் பெருமானுடைய மூர்த்தி வடிவங்கள் தியான அஷ்டோத்திரங்கள், ஐயப்ப பஜனைப் பாடல்கள் ஆகியன அடங்கியுள்ளன.

தொடர்ந்து 45 நாட்கள் விரத நாட்களில் காலை 11.00மணி முதல் 1.00மணிவரை அபிஷேகம், பூஜை, பஜனை ஆகியன இடம் பெறும்.

# கரித்தாஸ்-செடேக் நிறுவனத்தின் 40ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் தலைமை நிறுவனமான கரித்தாஸ் -செடேக் நிறுவனத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கியூடெக் -கரித்தாஸ் நிறுவனமானது இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள "கலைத்தூது கலையகத்தில்" கியூடெக்- கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி சீ.ஜே. ஜெயக்குமார் தலைமையில் விழா நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ். ஐ.ஓ.எம்.நிறுவன இயக்குநர் செல்வி நிக்கோலின் சாமிநாதர், ஐ.நா. உணவு விசாய நிறுவனத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ஆ.சிவாநந்தன் தம்பதியினர் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஓவியப் போட்டிகளில் பங்குபற்றி யாழ்.மாவட்ட பிராந்திய மட்டத்தில் தெரிவான வெற்றியாளர்களுக்கு கேடயங்களும், சான்றிதழ்களும் அன்று வழங்கப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இந் நிறுவனத்தின் சமூகப் பணிகளில் 25 வருடங்களுக்கு மேலாக தங்களை இணைத்துக்கொண்ட செல்வி ம.பத்மசேகரி மற்றும் திருமதி றோகினி ஜெபரட்ணம் ஆகியோரும் 15வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றிய ஜெ.மரியதாஸ், அ. அமிர்தநாதன் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ)




சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற ஒளிவிழாவின் போது கலைநிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவிகளையும் ஆசிரியர்களையும் காணலாம். (படங்கள்:சாவ.நிருபர்)

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 'குடும்ப உறவுகள்' நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கா. வைத்தீஸ்வரனின் குடும்ப உறவுகள் எனும் நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வெள்ளவத்தை உருத்திராமாவத்தையில் அமைந்துள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ச் சங்க தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இளைப்பாறிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன் தம்பதியினர், வீரகேசரி வார வெளியீடு, மித்திரன், மெட்றோ நீயூஸ் பிரதம ஆசிரியருமான கலாநிதி வி. தேவராஜ் ஆகியோரும் சிறப்புவிருந்தினர்களாக கொழும்புத் தமிழ்ச்சங்க துணைத்தலைவர் திருமதி எம். கதிர்காமநாதன், சமூக ஆர்வலர் கே. இரகுநாதன், அமுதா தம்பதியினர், கொழும்புத் தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் பெரியதம்பிப்பிள்ளை விஜயரத்தினம் தம்பதியினர், யோகாசனப் பேராசான் ந. ஆறுமுகம், சமூக ஆர்வலர் இ.சற்குருநாதன் தம்பதியினர், ஆசிரிய ஆலோசகர்கள் எஸ்.ஸ்ரீரெங்கநாதன் தம்பதியினர், இலங்கை வங்கி ஆலோசகர் டாக்டர் வை. லோகநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் முதற்பிரதியினை லயன் திருமதி சுப்பிரமணியம் தம்பதியினர். சமூக ஜோதி ச.இலகுப்பிள்ளை ஆகியோர் பெற்றுக் கொள்வர். (ஓ-4)

## அடிக்கல் நாட்டுவிழா

(மருதங்கேணி)

மந்திகை பொதுச் சந்தைக்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 11மணிக்கு பிரதேச செயலர் ச.சந்திரயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள தலைமையக உதவி ஆணையாளர் க.இராசையா அடிக்கல் நாட்டி வைப் பார்.

இதற்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒன்பதே கால் இலட்சம் ரூபா முதல் கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. (ஓ-35)

## நாளை ஐயப்ப விரதாரம்பம்

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில், சபரிமலை செல்லும் யாத்திரிகர்களுக்கான மாலை அணிவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகவுள் ளது.

மாலை அணிவிக்கும் நிகழ்வை ஆலய அறங்காவலரும் குருசாமியுமான கி.அரிகர சுதசர்மா நிகழ்த்தி வைப்பார். எனவே ஐயப்பன் அடியார்கள் அனைவரையும் ஆலயத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-6)




வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகம் நடாத்திய முதியோர் சிறுவர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இதில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு சமூகசேவைகள் உத்தியோகத்தர் வே.தபேந்திரன் பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்

## கிராமியக் கணிப்பீடும் தேவை இனங்காணலும்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள் எழுச்சித் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் ஒரு பிரிவுக்கு தலா இரண்டு நாட்கள் வீதம் கிராமியக் கணிப்பீடும், தேவை இனங்காணலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்பிரகாரம் கைதடி வடக்கு 20, 21 ஆம் திகதியும் கைதடி நாவற்குழி 23,24 ஆம்திகதிகளிலும் மீசாலை தெழுவாரம் பிரிவு 27,28 ஆம் திகதிகளிலும் உத்தியோகத்தர்கள் நேரடியாக விஜயம் செய்து தரவுகளைச் சேகரிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை கோயில் குடியிருப்பு பிரதேச விபரங்கள் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் சேகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-29)

## தரம் 9க்கான ஆண்டிறுதிப் பரீட்சை

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் தரம் 9க்கான ஆண்டிறுதிப் பரீட்சை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாகவும் இப் பரீட்சைக்கு பரீட்சைக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டதென வும் வடமராட்சி வலயக் கல்வி முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.புஷ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைகளில் 18 ஆம் திகதி தமிழ், இரண்டாம் மொழி சிங்களம் 19ஆமதிகதி சமயம், வரலாறு, 20ஆம்திகதி கணிதம், புவியியல் 21 ஆம்திகதி விஞ்ஞானம், குடியியல் 24ஆம்திகதி ஆங்கிலம், சுகாதாரம், 25ஆம் திகதி சங்கீதம், நடனம்,சித்திரம் ஆகிய பாடங்கள் நடைபெறவுள்ளது எனவும் ஏனைய தரங்களுக்கான பரீட்சை கட்டணங்களாக தரம் 1,2 க்கு 15 ரூபாவும்,தரம் 3,4,5 க்கு 20 ரூபாவும், தரம் 6,7க்கு 35ரூபா வும், தரம் 8க்கு 40 ரூபாவும்,தரம் 10க்கு 50 ரூபாவும், தரம் 11க்கு 60ரூபாவும் அறவிடப்படும் எனவும் அறிவித்துள்ளார். (ஓ-4-19)




## கியூடெக் நிறுவன மாணவர்களுக்கு அன்பளிப்பு

(சாவகச்சேரி)

கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 145 மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் வழங்கப்படவுள்ளது. (ஓ-29)

## க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாட செயலமர்வு

(வட்டுக்கோட்டை)

தென்னிந்திய திருச்சபை சிறுவர் இல்லங்களில் இருந்து இவ்வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கணிதபாட செயலமர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் பண்டத்தரிப்பு ஹரியன் வின்சலோ பெண்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஆதலால் இச் செயலமர்வில் அனைத்து சிறுவர் இல்ல மாணவர்களையும் அப்பிரதேச மற்றும் ஏனைய பாடசாலை மாணவர்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறும் ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் மற்றைய பாடங்களுக்கான செயலமர்வுகள் யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய சிறுவர் இல்லங்களில் நடை பெறுவதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தென்னிந்திய திருச் சபையின் அனைத்து சிறுவர் இல்லங்களின் பொதுமுகாமையாளரும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியருமான அன்ரன் சந்திரன் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். (ஓ-27)

# நோத்முதல் கோபல்லவா வரை 153



### டொனமூர் கண்ட அரசாங்க சபை

#### 7.போக்குவரத்து வேலை நிர்வாகசபை

பகிரங்க வேலைகள், அரசாங்க வீதிகள் பாலங்கள், உள்நாட்டு நீர் வாய்க்கால்கள், ஆலயங்கள் , சுங்கத்தரிப்புகள் போக்குவரத்து வீதித்தடைகள், நெருப்பணைத்தல், இலங்கைப் புகையிரதப் பகுதி, மின்சாரத் திணைக்களம், துறைமுகங்கள், கப்பற்படை யின் எண்ணெய்க் குதங்கள், தபால் தந்தி டெலிபோன், கடல் தந்தி, ஆகாயத் தந்தி, அரசாங்கத் தந்தி, தபாற்கந்தோர் சேமிப்பு.

ஏழு நிர்வாக சபைகளிலும் எந்த எந்தத் திணைக்களங்கள் அமையலாம் எனக் கூறிய டொனமூர்க் குழுவினர், அத்திணைக்களங்கள் பிற்காலப் பரிபாலன வசதியை முன்னிட்டு மாற்றியமைக்கப்படினும் அமையுமெனத் தம் கருத்தையும் தெரிவித்துள்ளார்கள்.

இங்ஙனம் அமைந்த மந்திரிமார் சபையே பழைய சட்ட நிறைவேற்றுச் சபையின் கருமங்களைக் கொண்டு நடத்தும். மந்திரிமார் தத்தம் மேற்பார்வையில் இயங்கும் திணைக்களங்களின் பரிபாலனத்துக்கு வேண்டிய பணத்தைக் கோரும் செலவு விபரத்தை ஒவ்வோராண்டிலும் ஏப்ரல் மாதம் முடிவதற்குள் சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களங்களின் வருடாந்த வருமானம் செலவீனங்கள் என்பவற்றை நிதிக்காரியதரிசி நுணுகி ஆராய்வார். அதன்பின் வரவு செலவு திட்டம் மந்திரியார் சபையில் தயாரிக்கப்பட்டு அரசாங்க சபையில் சமர்ப்பிக்கப்படும். அது நிறைவேற்றப் படுமாயின் தயாரித்த திட்டத்தின் படி அலுவல்கள் நடைபெறும்.

### மீள் பார்வை

வரவு செலவுத் திட்டத்தை அரசாங்க சபை ஏற்காவிட்டால் ஆள்பதி அதனைக் குலைத்துவிடுவார். அதன்பின் புதிய சபைக்கான தேர்தல் நடைபெறும். அரசாங்க சபை அங்கத்தவராய பிரதிநிதிகள் நாட்டுக்குச் சேவை செய்பவராதலாலே அவர்களுடைய சேவைக் காலத்தில் அவர்களுடைய கைச் செலவுக்காக மாதாந்தம் 500 ரூபாவும் இலவசப் பிரயாண வசதிகளும் இலவச தபால் தந்தி சாதனங்களும் வழங்கப்பட்டன. மந்திரிமாருக்கு 1500ரூபா வழங்கப்பட்டது.

பிரித்தானிய பாராளுமன்றத்தமர்ந்த மந்திரிமாருக்கும் இலங்கை அரசாங்க சபையிலமர்ந்த மந்திரிமாருக்கும் வேறுபாடு கள் இருந்தன. அங்கே அவர்கள் கருத் தொத்த மனத்தினராய் ஒரே பூட்கையுடையவராய் ஒரே கட்சியமைவுடையவராய் எல்லோரும் ஒருவருக்கும், ஒருவர் எல்லோருக்கும் உதவியும் பொறுப்பும் உடையவராய்க் கோபுர வளைவின் கற்களைப் போலவும் வண்டிற் சில்லின் ஆரக் கம்புகள் போலவும் அமர்ந்தனர்.

ஆனால் இங்கே மந்திரிமார் தெரியப்பட்ட வகையாலே அவர்கள் வெவ்வேறு நோக்கமும் போக்கும் உடையவராய் பொதுவான கொள்கை எவ்வளவுமில்லாதவராய், மந்திரியாய் வந்தவர்கள் மற்றவரை முந்திடவும் எந்த விதத்தினினும் ஏற்றமதைத் தாம் விரும்பிக் கூட்டு முறையில்லாமல் ஒழுகினர். எனவேதான் அவர்கள் ஆளுக்கு ஆள் எதிராகவும் வாக்களித்தும் வந்தனர்.

பிரித்தானிய பாராளுமன்றத்துக்குப் பொறுப்பும் பணிவுமுள்ள மந்திரிமார் தாம் கொண்டு வந்த பிரேரணைகள் பாராளுமன்றப் பொதுச் சபையிலே தோல்வி கண்டால் உடனடியாக விலகிக்கொள்ளும் சம்பிரதாயம் நிலவுகின்றது.

ஆனால் இலங்கையில் அரசாங்க சபைகளின் காலத்திலே அப்படியான யாப்பு மரபு இருக்கவில்லை. எனவே தான் மந்திரிமார் எல்லோரும் ஒரேவழி கருத்தொத்துக் கொண்டு வந்த பிரேரணைகள் அரசாங்க சபையில் வீழ்த்தப்பட்டபோதிலும் அரசாங்க சபை குலைக்கப்படாமலோ மந்திரிமார் விலகல் செய்யாமலோ நிலைமை நிலவியது. அத்தகைய சந்தர்ப்பங்கள் பலவாக இருந்த போதிலும் ஈண்டு விளக்கத்துக்காக இரண்டொன் றைக் குறிப்பில் மிகையாகாது.


உள்நாட்டு மந்திரியாராயிருந்த திரு டி.வி. யயத்திலகா பாதகவயல் நடைமுறைக் கோவையின் திருத்தப் பிரேரணையை மந்திரிமாருடைய ஆதரவுடன் கொண்டு வந்த போதிலும் அது 27.1.1932 இல் வீழ்த்தப்பட்டது.

**க.சி.குலரத்தினம்**

அதனால் மந்திரிமார் விலகவுமில்லை. சபை குலைக்கப்படவுமில்லை. அதுபோலவே 9.3.1932 இல் சம்பள நிர்ணயசபை நியமனப் பிரேரணையின் போதும், 20.2.40 இல் கைத்தொழில் சம்பந்தமான பிரேரணையின் போதும் மந்திரிமாரின் நோக்கம் ஈடேறவில்லை.

(தொடரும்)







காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் எஸ்.கோடிலிங்கம் ஓய்வுபெற்றுள்ளமையையிட்டு சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புதிதாக பதவியேற்ற பொதுமுகாமையாளர் எஸ்.பீற்றர்ஜஸ்ரின் மலர்மாலையிட்டு பாராட்டுவதனையும், காசாளர் க.சோமசுந்தரம் தங்க மோதிரம் இட்டுக் கௌரவிப்பதனையும், ப.நோ.கூ.சங்க தலைவர், நிர்வாகசபை உறுப்பினர், சங்கப் பணியாளர்கள் ஆகியோர் விழா நாயகனுடன் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

**வரவு செலவு திட்டம் 2009**

# வரிவிதிப்பு மாற்றங்கள் : ஓர் ஆய்வு

*நேற்றைய தொடர்ச்சி..*

*4 வரி நிர்வாகமும் விபரத் திரட்டும்*

இவ் வரி அறவீட்டை உள்நாட்டு இறை



வரித் திணைக்களம் நிர்வகிக்கும் இறக்குமதியாளர்களைத் தவிர இவ்வரிக்கு பொறுப்புடையாளர்கள் ஏதேனும் காலாண்டு ஒன்றிற்காக காலாண்டு முடிவடைந்து 20 நாட்களுக்குள் உரிய கொடுப்பனவுடன் வரி விபரத் திரட்டையும் சமர்ப்பிக்க வேண்டும். வரி மதிப்பீடுகள், மேன்முறையீடுகள் மற்றும் அறவீடுகள் தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இந்த அறவீடு தொடர்பிலும் ஏற்புடையதாக இருக்கும்.

♦ இறக்குமதியாளர்களினால் செலுத்தப்பட வேண்டிய அறவீடானது சுங்கத்தின் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அறவீடு செய்யப்படும்.

6 சுங்கத் தீர்வை

6.1 *சதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் தீர்வைச் சீர்திருத்தங்கள்*

♦ இதன் கீழ் இலங்கையினால் கைச் சாத்திடப்பட்ட தீர்வைச் சீர்திருத்தங்கள் 07.11.2008 இலிருந்து பின்வருவனவற்றிற்கு நடைமுறைப்படுத்தப்படும்.

தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேச உடன்படிக்கை (Safta) ஏற்பாடுகளுக்கு அமைவாக 20% இதற் குறைந்த பொதுத் தீர்வை வீதத்தினைக் கொண்ட பொருட்கள் தொடர்பில் 10% தீர்வை வீதத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு இலங்கை கேட்கப்பட்டுள்ளது.

6.2 *பெறுமதி சேர்க்கப்பட்ட வெயின் குவாட்ஸ் மீதான ஏற்றுமதித் தீர்வை*

இதன் பொருட்டு மெற்றிக் தொன் ஒன்றுக்கான ஏற்றுமதிப் பெறுமதியில் (FOB) 20% இற்கு ஒத்த ஏற்றுமதித் தீர்வை யொன்று தற்போது செலுத்தப்பட வேண்டியுள்ளது. 07.11.2008 இலிருந்து மூலப் பொருட்களைத் தவிர இயைபுக் குறியீட்டில் (HS Code) தெரிவிக்கப்பட்டவாறு பூச்சியம் தொடக்கம் 14% வரையில் தீர்வை வீதம் திருத்தப்படும்.

6.3 *உள்ளூர் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கான தீர்வைத் திருத்தங்கள்.*

1 கடதாசியும் கடதாசி அட்டை விதை அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் சக்தி சேமிக்கும் இலத்திரனியல் மின் குமிழ் விளக்குகளுக்கு இறக்குமதித் தீர்வை நீக்கப்படும்.

2. காவலிடப்படாத கடதாசியும் கடதாசி அட்டைகளும் சீமெந்து, பொருள் ஏற்றும் வாகனங்கள் போன்றவற்றிற்கு தீர்வை குறைக்கப்பட்டுள்ளன.

3. இவற்றிற்கு மேலதிகமாக விலக்களிப்புப் பட்டியலொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

7 செஸ்வரி

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க செஸ் (Cess) வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

♦ சொக்லேட், பிஸ்கட், இனிப்புப் பண்டங்கள் குளிரூட்டி, மின் விசிறி, பீங்கான் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மீதான செஸ் வரி புடைவைகள் மீதான செஸ் வரி 50% ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

♦ இறக்குமதியாகும் பழங்கள், மரக்கறிகள், சேலைகள், சாரங்கள், தைத்த ஆடைகள் மற்றும் புடவைகள் மீதான செஸ்வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

8. *துறைமுக மற்றும் விமான நிலைய அறவீடு துறைமுக மற்றும் விமான நிலைய அறவீடு (Poost and Airport Levy PAL) 3% இலிருந்து 5% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

9. தொலைபேசி வரி தற்போது நடைமுறையிலிருக்கும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கம்பி இணைக்கப்படாத தொலைபேசிகள் தொடர்பில் அறவிடப்படும் 10% வரி நிலையான தொலைபேசிகளுக்கும் உள்ளடங்குமாறு விரிவுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*முடிவுரை*

ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட வரி தொடர்பான யோசனைகள் அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்ற அதேவேளை பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதற்கு ஆதாரமாக வருமான வரி விதிப்பின் வரி விதிப்புக்குரிய வருமான மட்டங்களை அதிகரித்தல், வட்டி மீதான நிறுத்தி வைத்தல், வரிக்கான வருமான மட்டத்தை அதிகரித்ததன் மூலம் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பாலசுந்தரம் சிவாஜி**
B.A.(Hons), M.A.(Econ), MBA(Finance)
FMAAT
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

இதற்கு மேலதிகமாக நேர்வரி தொடர்பில் பெறுமதி சேர்வரி வீதம் குறைக்கப்பட்டமை, பல பொருட்களுக்கான சுங்கத் தீர்வை நீக்கம் மற்றும் குறைப்பு போன்றவையும் பொதுமக்களுக்கான நிவாரணங்கள் ஆகும். வரிவிதிப்புக் கப்பால் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்பு, எரிபொருட்களின் விலைக் குறைப்பும் மேலதிக நிவாரணங்களாகும். இவ்வாறான பரந்த வரி முறையைக் கொண்ட ஒரு நாட்டில் எதிர்பார்த்த குறிக்கோள்களின் வெற்றியானது சிறந்த வரி நிர்வாகம், பொது மக்களினதும் வர்த்தக சமூகத்தினதும் ஒத்துழைப்பிலும் தங்கியிருக்கும் என்பது மிகையாகாது.

(முற்றும்)

# வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்-2009

## நேற்றைய தொடர்ச்சி...

06) பின்வரும் விடயங்களுக்காக பிரிவு 2 திருத்தப்படும்.

(i). பெறுமதி சேர் வரி விகிதத்தினை 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைத்தல்

(ii) 2007 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபாரப் பொருட்கள் அறவீட்டுச் சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக வரி விதிப்பனவுக்கு உட்பட்ட பொருட்கள் அடிப்படை விகித அட்டவணையினை (5%விகிதம்) நீக்குதல்; மற்றும்

(iii)அட்டவணையிலுள்ள எஞ்சிய பொருட்களுக்கான பெறுமதி சேர் வரி கடப்பாட்டினை 12சத வீதமாக ஆக்குதல்.

07)செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பான உள்ளீட்டு வரிக்கழிப்பனவு வரையறையினை 20சதவீதத்திலிருந்து 10 சத வீதமாக்குதவற்கு பிரிவு 22 திருத்தப்படும்.

08) பெ.சே.வரிக்குப் பதிவு செய்வதற்கான வரையறை வரி விதிப்பனவு காலமொன்றுக்கு ரூ.650,000 ஆக அல்லது ஆண்டொன்றுக்கு ரூ.2.5 மில்லியனாக அதிகரிக்கும் வகையில் 10ஆம்பிரிவு திருத்தப்படும்.அதே போன்று விருப்பு பெறுமதி சேர்வரிக்கான பதிவு வரையறை ரூ 3 மில்லியனாக அதிகரிப்பதற்கு பிரிவு 25 (i) திருத்தப்படும்.

09) கமநெகும, மகநெகும, சமுர்த்தி மற்றும் சமுதாயப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் சமுதாய நீர்ப்பாசன கருத்திட்டங்கள் என்பவற்றின் நிர்மாணப்பணிகள் விலக்களிக்கப்படும் வகையில், முதலாம் அட்டவணையின் பகுதி ii திருத்தப்படும்.

3. பொருளாதார சேவைக் கட்டணம்.

(2006ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கப் பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம்)

01) பெ.சே கட்டணம் செலுத்துவதற் கான உச்ச எல்லைக் காலாண்டுடொன்றிற்கு (ரூ.15 மில்லியனிலிருந்து) ரூ.30மில்லியனாக அதிகரிக்கப்படும் வகையில் 2 (2) ஆம் பிரிவு திருத்தப்படும்.

02.பின்வரும் விடயங்களுக்காக பிரிவு 2 (3) திருத்தப்படும்.

i.ஆரம்ப பெ.சே. கட்டணப் பொறுப்புடைமைக்கு ஏற்புடைத்தான36 மாத மன்னிப்புக் காலத்தினை நீக்குதல்.

ii ஏதேனும் வர்த்தகம் அல்லது பிற நிதி நிறுவகங்கள் மற்றும் அடகுத்தரகர்கள் உள்ளடங்கலாக வங்கியொன்றின் வியாபாரம் தொடர்பில் புரள்விற்கான வரை விலக்கணத்தினை விரிவுபடுத்துதல்.

03.''புரள்வுவரி'' பற்றிய வரைவிலக்கணத்தில் இலங்கை அரசாங்கத்தினால் வதிவல்லாத எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கையில் உரிமம் வழங்கப்பட்ட ஏதேனும் வர்த்தகவங்கிக்குவழங்கப்பட்ட பிணையினால் பிரதி நிதித்துவப்படுத்தாத ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்டவைகள் என்பதையும் உள்ளடங்கலாக திருத்தப்படும்.

4. பற்று வரி

(2002ஆம்ஆண்டின்16ஆம் இலக்க பற்று வரிச் சட்டம்)

01.நீதவானின் ஊடாக தற்பொழுதிருக்கும் மீள் அறவீட்டுச் செயன் முறைக்கு மேலதிகமாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ளவாறான பிற அறவீட்டு ஏற்பாடுகளைச் சேர்ப்பதற்காக சட்டத்தின் ii ஆம் பிரிவு திருத்தப்படும்.

5.சமூகப் பொறுப்புடைமை அறவீடு

(2005 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க நிதிச் ச ட்டத்தின் பகுதி i )

01. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கம்பனிகளினால் செலுத்தப்பட வேண்டியுள்ளவருமான வரி தொடர்பில் சமூகப் பொறுப்புடைமை அறவீட்டின் விண்ணப்பம்2008.04.01 ஆம் திகதியிலிருந்து பயன் வலுப் பெறும் வகையில் இச் சட்டம் திருத்தப்படும்.



6.நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு.

(2005ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி iii )

01. உள்நாட்டுச் இறை வரிச்சட்டத்தின் 153ஆம் பிரிவின் கீழ் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களிடமிருந்து வருமான வரியினை நிறுத்தி வைக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீட்டினை நிறுத்தி வைத்தல் வரியாகச் சேரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு சட்டத்தின் குறித்த பகுதி திருத்தப்படும்.

.7. தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அறவீடு

01) அந்த அற வீட்டுக்குப் பின்வரும் ஆட்கள்அல்லது பங்குடமைகள் கடப்பாடுடையதாக இருக்கும்.

அ) இறக்குமதியாளர்கள்

ஆ)உற்பத்தியாளர்கள் மற்றும் இசேவை வழங்குநர்கள்.

02) வரிவிதிப்புக்காலாண்டாகும்; 2009 மற்றும்2010ஆம்ஆண்டுகளுக்கு எட்டு காலாண்டுகளாக அறவீடு செயற்படுத்தப்படும்.

03) அறவீட்டின் அடிப்படைப் புரள்வாகும் (உள்ளடங்கல்களின்தேறியது) இவை பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயற்படுத்தப்படும்.

அ) இறக்குமதியாளர் ஒருவர் இறக் குமதி செய்யப்பட்டபொருட்களின் கப்பலேற்றல் பெறுமதியாகும்.

ஆ)கீழ்வருவனவற்றினால் கழிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெறப்பட்ட தொகை அல்லது பெறக் கூடி யதாக உள்ள தெ ாகை க்கு கடப்பாடுடைய வேறு பிற ஆட்கள்.

i )உறப்பட்ட அறவிட முடியாத் கடன்கள்

ii) 1989 ஆம் ஆண்டின்13ஆம்இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட உற்பத்தித் தீர்வை

iii )2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப் பட்டபெறுமதி சேர்வரி.

04)வரி செலுத்தல் எல்லை

ஏதேனும் காலா ண்டுக்காகச் செலுத்த வேண்டியஅறவீடு, அக்காலாண்டின் புரள்வு ரூ.100, 000 இனைவிஞ்சு கின்ற போதுசெலுத்தப்பட முடியும்.

0 5) அ ற வீ ட் டி ன் விகிதம்.

அறவீட்டின் விகி தம்1%ஆகஇருக்கும்.

06) ஒவ்வொரு கடப் பாடுடைய ஆளும் (இற க்கும தியாளர்கள் தவிர) உள்நாட்டு இறைவரி ஆணையாளர்நாயகத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட படிவத்தில் அவரது காலாண்டுப் புரள்வினை விபரத் திரட்டொன்றின் மூலம் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவதுடன் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் அறவீட்டினைச்செலுத்துவார்.

ஏதேனும் காலாண்டு ஒன்றுக்கான அறவீடுகள் சுங்க ப்பணிப்பாளர் நாயகத்தினர்ல் அறவீடு செய்யப்படும்.

07) வரி மதிப்பீடுகள், மேன் முறையீடுகள் மற்றும் அறவீடுகள்தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இந்த அறவீட்டின் மதிப்பீடு, மேன்முறையீடு, அறவீடு போன்றவற்றுக்கும்ஏற்புடையதாதல் வேண்டும்.

08)பற்றுக்கள்

i) இறக்குமதி செய்யப்பட்டவை (பொறித் தொகுதி இயந்திரங்கள் போன்றன தவிர்ந்த) அல்லது

ii)வேறு ஏதேனும் உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதுடன், அவை அத்தகைய உற்பத்தி வியாபாரத்தில் பிரத்தியேகமாகப்பயன்படுத்தப்பட்டபொருட்கள் மீது செலுத்தப்பட்ட அறவீட்டுக்காக ஒவ்வொரு உற்பத்தியாளரும் பற்றுக்குத் தகுதி பெறுவர்.

அத்தகைய காலாண்டிற்காக பொறுப்புடைமையை விஞ்சிய ஏதேனும் காலாண்டிற்காக தேசக் கட்டுமானஅறவீடு செலுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அத்தகைய விஞ்சிய தொகை தொடர்ந்து வரும் காலாண்டு களுக்குமுன் கொண்டு வரப்படுவதுடன், அக் காலாண்டுக்கானதேசக் கட்டுமான அறவீட்டிற்கு எதிராக கழிப்பனவு செய்யப்படுவதுடன்அறவீட்டின் எந்தவொரு பகுதியும் மீளளிப்புச்செய்யப்படமாட்டாது.

09) நீக்கல்கள்

பின்வருவன அறவீடு செலுத்தப்படும் புரள்வின் பகுதியொன்றாக இருக்க மாட்டாது.

i)அவரினால் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பொருளினை அத்தகைய ஆளினால் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியிலிருந்து பெற்றவை.

ii)ஏற்றுமதிக்காக ஏதேனும் பொருட் கள் அத்தகையஆளினால் உற்பத்தி செய் யப்படுவதற்காக அல்லது பிரத்தியேகமாகக் குறித்த உற்பத்தியில் அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்டபொறித் தொ குதி இணைப்புக்கள், இயந்திரங்களாக அல்லாத ஏதேனும் பொருட்களின் பெறுமதி.

iii)இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டபொருட்கள் அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியில் அல்லது பிற ஆவணச் சான்றுகள் தொடர்பில் இலங்கையில் ஏதேனும் வங்கியில் திறக்கப்பட்ட கடன் கடிதமொன்றினைக் காட்டுவது தொடர்பில்உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் திருப்தி கொள்வாராயின் எவரேனும் ஏற்றுமதியாளரினால் ஏதேனும் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் பெறுகைகள்.

V) பின்வரும் நோக்கங்களுக்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி, அப்பொருட் கள் இறக்குமதி செய்யப்பட்ட நோக்கம் திருப்திப் படுத்தப்பட்டால் ,

அ) கண்காட்சி ஒன்றில் பார்வைக்கு வைத்தல்

ஆ) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்திற்காக இலங்கையில் தற்காலிகமாகப் பயன்படுத்தல்.

இ திருத்த வேலைகளின் நோக்கமாக இலங்கைக்கு எடுத்து வரப்படும் பொருட்கள் அல்லது.

ஈ) இது போன்ற ஒத்த நோக்கங்கள்

அத்துடன் அத்தகைய பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு இறக்குமதி செய்யப் பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்அத்தகையஆளினால் மீண்டும் கப்பலேற்றமுடியுமாகஇருக்கவேண்டும்.(முற்றும்)

## என்பு மச்சை மாற்று சிகிச்சை மூலம் எயிட்ஸ் நோயிலிருந்து விடுதலை

### ஜேர்மனிய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்

என்பு மச்சை மாற்று சிகிச்சை மூலம் எயிட்ஸ் நோயாளிகளை குணப்படுத்த முடியும் என ஜேர்மனிய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்

குருதிப் புற்று நோய் மற்றும் எயிட்ஸ் நோய் என்பவற்றால் துன்பப்பட்ட ஒருவ ருக்கு இரு வருடங்களுக்கு முன் என்பு மச்சை மாற்று சிகிச்சை மேற் கொள்ளப்பட்டதாகவும் தற் போது அந் நபருக்கு மேற்படி நோய்கள் இருப்பதற்கான எது வித அறி குறியும் இல்லை எனவும் ஜேர்மனிய பெர்லின் சரிட்டி மருத்துவமனை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கப் பிரஜையான மேற்படி 42 வயது நோயாளியின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

அதே சமயம் அமெரிக்க மின்னேஸோரா மாநிலத்தைச் சேர்ந்த மயோ மருத்துவமனையில் எயிட்ஸ் நோய் தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவரும்மருத்துவ கலாநிதி அன்றூ பாட்லி,மேற்படி நோயாளி எயிட்ஸ் நோயிலிருந்து குணமாகியுள்ளதை உறுதிப்படுத்த மேலதிக பரிசோதனைகள் தேவைப்படும் என வலியுறுத்தியுள்ளார்.

உலகெங்கும் 33 மில்லியன்மக்கள் எயிட்ஸ் நோய் தொற்றுக்கு ஆளாகியுள்ளதுடன் வருடாந்தம் 2 மில்லியன் பேர் அந் நோயால் மரணமடைந்து வருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

## மதுபானத்திலிருந்து வைரங்கள் மெக்ஸிகோ விஞ்ஞானிகள் சாதனை

மெக்ஸிகோவின் பிரபல்யம் பெற்ற மதுபான வகையான டெகுயிலாவைப் பயன் படுத்தி வைரங்களை உருவாக்கும் முயற்சியில் மெக்ஸிகோ விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

மெக்ஸிகோவிலுள்ள தேசிய தன்னாட்சி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பௌதீகவியல் விஞ்ஞானிகளே இந்த அரிய கண்டு பிடிப்பை செய்துள்ளனர்.

ஆனால் மேற்படி மதுபானத்தில் தயாரிக்கப்பட்ட வைரங்களானது பயன்படுத்த மிகவும் சிறியவையாகவுள்ளதால் அவற்றை நகையாகப் பயன்படுத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படிமதுபானத்திலிருந்து வைர ங்க ளை உருவாக்கும் செயன்முறை குறித்து இந்த ஆய்வுக்கு தலைமை தாங்கிய விஞ்ஞானி மிகுயல் அபதிகா விபரிக்கையில் நாங்கள் முதலில் திரவ ம துபானத்தை பெரு மளவு வெப்பத்தை ப் பயன்படுத்தி ஆவி நிலைக்கு மாற்றினோம்

அதனையடுத்துஆவி மூலக் கூறுகள் சிறிய ப குதிகளாக பிரிக்கப்பட்டன. அதன் பின் வெப்ப நிலையை சுமார் 800பாகை செல்சியஸ் வரை அதிகரித்தோம் இதன் முடிவின் விளைவாக கிடைத்த காபன் அணுக்களைஒன்று திரட்டி மிகச் சிறிய வைரப் படலத்தை உருவாக்கினோம் என கூறினார்.

மிகவும் மலிவானமுறையில் தயாரிக்கப்படும் இந்த வைரத்தை கணனிகளின் இலத்திரனியல் சிப்புகள் மற்றும் மருத்துவ உப க ரணங்களில் பயன்படுத்தி அவற்றின் செயற்றிறனை மேம் படுத் த மு டியு ம் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்

(ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

(சென்ற வாரத் தொடர்ச்சி)

என்ன வளம் இல்லை எம் தேசத்திலே? எமக்கென இருக்கின்ற வளங்கள் அனைத்



தையும் நன்கு இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்தும் இலகு தொழில் நுட்பங்களை கண்டுபிடித்து இயற்கையின்அரவணைப் பிலேயே புதுமைகள் படைத்திட வேண்டும்.

எங்களை ஆளுகின்ற ஐம்பெரும் பூதங்களான நிலம்,நீர், நெருப்பு, காற்று,ஆகாயம் என்பனவற்றை மாசுபடுத்தாது. அவற்றின் ஆசியுடன் விவசாயத்தில் புதுமைகள் செய்திடல் வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் இயற்கையுடனான விவசாயத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்.

சக்தியைத் தேடி அங்கலாய்க்கும் எங்களுக்கு, அதாவது செயற்கையில் உருவாகும் மின்சக்தியை இங்கே குறிப்பிடுகிறேன். இயற்கை தந்த சூரிய சக்தியை,காற்று சக்தியைப் பயன்படுத்த தெரியவில்லை. தொடர்ச்சியாக பத்து மணித்தியாலங்கள் பகல் சூரிய ஒளியில் சஞ்சரிக்கும் எங்களது தேசத்திற்கு சூரிய சக்தி ஒன்றே போதும். இலகு தொழில் நுட்பத்துடன் இயற்கையும் கலந்த சூரிய கலங்களின் பயன்பாடு இங்கே அவசியமாகின்றது.

வசதி படைத்தவர்களுக்கான தொழில் நுட்பமாகவும் பயன்படுவதாகவும் இல்லாது சாதாரண குடிமகன் குறிப்பாக விவசாயிகள் இலகுவில் பயன்படுத்தும் தொழில்நுட்பமாக மாற்றிக் காட்டுங்களேன். இத்துறை சார்ந்த எங்களூர் விஞ்ஞானிகளுக்கு இது சமர்ப்பணம்.

### கழிவுகளை கூட்டெருவாக்க வேண்டும்

கழிவுகளை மீள் சுழற்சி செய்து வளமாக்கியாக மாற்றிடுதல் நல்லது. எமது சூழலில் கழிவுகள் சேருவதால் வரும் பிரச்சினைகளை நாம் அறிவோம். காலம் தாழ்த்தி வந்த மழையால் இம்முறையும் அல்லோலகல்லோலப்பட வேண்டியிருக்கும்.கழிவுகள் அடைப்பதாலும் நீர் தேங்கி நிற்பதாலும் சுகாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது.

கழிவுகளை கூட்டெருவாக மாற்றும் தொழில்நுட்பத்தை முழுமையாக பயன்படுத்தி கூட்டெரு உற்பத்தி செய்தல் சாலச் சிறந்தது. கண்டி வீதி திடீரென மூடிக் கொண்டதால் வன்னியெருவின் வருகையும் தடைப்பட்டுவிட்டது! இதற்கு மாற்றீடாக இங்கிருக்கும் கழிவுகளை எளிமையான முறைகளைக் கொண்டு சிறந்த கூட்டெருவாக மாற்றிட முடியும்.




### மண்புழு உரம் நல்லதொரு கூட்டெரு

வீட்டுக் கழிவுகளையும் விளைநிலத்திலிருந்து பெறப்படும் சேதனக் கழிவுகளை மண்புழு கொண்டு நல்லதொரு கூட்டுரமாக மாற்றிட முடியும். மண்ணில் வாழும் கமக்காரனின் இனிய நண்பன் மண்புழு. அனைத்து சேதனக் கழிவுகளையும் மண்புழு உணவாக உண்டு அதனது கழிவாக நல்ல உரத்தை தருகின்றது. பயிர்கள் உடனடியாக அகத்துறுஞ்சிக் கொள்ளக் கூடியதாக அனைத்து கனிமங்களும் மண்புழு உரத்தில் இருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

மண்புழுவின் பயன்பாட்டினால் தாவர மற்றும் விலங்குக் கழிவுகள் கூட்டுரமாகும் தன்மை பெறுகின்றன. இயற்கையினுடன் இணைந்ததான மண்புழுவின் செயற்பாடு சேதன விவசாயத்தை மேம்படுத்தி செல்ல பாரிய அளவில் உதவுகின்றது.

சேதன கழிவுகளனைத்தும் கூட்டெருவாக மாற்றப்படுவதுடன் மண்புழுவிலிருந்து வெளிவரும் சுரப்புகளுடன் சமிபாட்டுத் தொகுதியிலுள்ள நொதியங்கள் என அனைத்தும் கலந்த கலவைதான் மண்புழு உரம். இருக்கின்ற வளங்களை வைத்துக் கொண்டு இலகுவில் சிறந்ததொரு கூட்டெருவை அவரவர் வயல்களிலோ பண்ணைகளிலோ தயாரிக்க முடியும்.இவ்வகை கூட்டெருக்கள் மண்!ணின் வளத்தை மேன்மேலும் மேம்படுத்த உதவும்.

### உரத்திற்கு மாற்றீடு பசுந்தாள் பசளைகள்

மண் வளம் பெருகினால் பயிர்களும் சிறப்பாக வளரும். சிறப்பாக மண் வளத்தை பேணுதலென்பது விவசாயிக்கு முன்னிற்கும் சவாலாகும். இலங்கையிலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தான் அதிகமான அளவில் அசேதன இரசாயனப் பசளைகளும் பீடை நாசினிகளும் பயன்படுத்தப்படுகின்றன. மிகவும் செறிவான பயிர்ச்செய்கை செய்யப்படும் இடங்களிலுள்ள குடிநீருக்காக பயன்படுத்தப்படும் கிணறுகளிலிருந்து பெறப்படும் நீரில் உலக சுகாதார அறிவுறுத்தல் சுட்டியான 10 மி.கிராம் /லீற்றருக்கு என்ற அளவை விட 65 வீதமான வை அதிகரித்து காணப்பட்டிருக்கின்றன. இது ஒருஅபாயகரமானநிலையாகும். தேவைக்கு மேலதிகமாக பயன்படுத்தப்பட்ட அசேதன இரசாயனங்களினால் மண் மாசுபட்டு நோய் வாய்ப்பட்டுள்ளது.

எங்களூர் மக்கள் இம் மாதிரியான பிரச்சினைகள்எழும் போதெல்லாம் சேதன முறைகளைப் பயன்படுத்தி அவற்றை காப்பதில் கவனமெடுத்து ள்ளமை நல்ல சகுணம் எனலாம். பசுந்தாள்பசளைகள் இயற்கை யன்னை எமக்குத்தந்த பொக்கிஷமாகும்.

பசுந்தாள்பசளைகளின் மூலமாக மண்ணினுள்ள சேதன பொருள் அல்லது மட்கு இனது அளவினை அதிகரிக்கக் கூடியதாய் இருக்கும். மண்ணில் உள்ள நன்மை தரும் நுண்ணங்கிகளின் அளவை பெருக்குவதற்கான ஊடகமாக உக்கிக் கொண்டிருக்கும் தாவர பொருட்கள் உதவும்.

யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாகவே பசுந்தாள் பசளைகளைப் பயன்படுத்தும் விவசாயிகள் இருக்கின்றார்கள். மரங்கள் செடிகளை வெட்டி பதப்படுத்தி பயிர்களுக்கடியில் தாழ்க்கும் பழக்கும் எம்மவர்களிடையே தொன்று தொட்டு உண்டு. அந்த வகையிலே அசேதன இரசாயனங்களுக்கு மாற்றீடாக பசுந்தாள் பசளைகளையும் பசுந்தாள் இலைகளையும் எம்மவர்கள் பயன்படுத்த முனைந்து வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

புகையிலை,திராட்சை மற்றும் வாழைக்கு பூவரசம்இலையும்; வெங்காயம், தக்காளி கத்தரி, பயிர்களுக்கு சணலும்; புகையிலை, திராட்சைக்கு தனியே வேம்பும்; வெங்காயத்திற்கு தனியே எருக்கலை இலையும்; நெல்லிற்கு பனைஓலையும்; பயறு, உழுந்து,நெல் மற்றும் தென்னைக்கு கிளிறிசிடியாவும்; பசுந்தாள் பசளையாக பசுந்தாள் இலை பசளையாகப் பயன்படுத்துகிறார்கள். (தொடரும்)

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# சுத்தமான பால் உற்பத்தி

(சென்றவாரத் தொடர்ச்சி)

### தொற்று நீக்குதல்

தொற்றுதல்களை ஏற்படுத்தும் காரணிகளை அழிக்கின்ற செயற்பாடானது தொற்று நீக்கல் எனப்படுகிறது. மாட்டுப் பண்ணைகளில் மறைமுகமாக தூசுகள், வெடிப்புகள், தவாளிப்புகள் போன்றவற்றில் அதிகளவில் காணப்படும் நோய்க்காரணிகளை அகற்றுவதற்கு பலவகையான தொற்று நீக்கிகள் (குளோரின், கொண்டிஸ் போன்றவை) பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றினை விட மேலதிகமாக சூரிய ஒளி,வெப்பம்,வெப்பமான வளி,சூடான நீர், நீராவி, அமிலங்கள், காரங்கள் போன்ற இரசாயனப் பதார்த்தங்களையும் பயன்படுத்தமுடியும்.

### உணவூட்டல் முறை

சரியான அளவுகளிலான பசுந்தீவனங்கள்,வைக்கோல்,சகல அத்தியாவசியமான போசணைப் பதார்த்தங்களையும் கனியுப்புக்களையும் கொண்ட சமநிலை (Balanced) மாட்டுத்தீவனங்கள் தரமான பால் உற்பத்திக்கு வழிவகுக்கின்றது.

தரக்குறைவான வைக்கோல் அல்லது விற்றமின் E குறைபாடுள்ள உணவுகள் பசுவிற்கு வழங்கப்படும் போது பாலில் உள்ள நிரம்பாத கொழுப்பமிலங்கள் ஒட்சியேற்றப்படுவதனால் சுவையானது மாற்றமடைகின்றது.

பீடைகொல்லிகள், இரசாயனப் பதார்த்தங்கள் (Chemicals) அற்ற உணவுப் பொருட்கள் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எல்லா உணவுப் பதார்த்தங்களும் ஈரலிப்பற்ற/ உலர்ந்த நிலையில் சேமித்து வைக்கப்படுவதன் மூலம் அஸ்பேர்யிலஸ் பங்கசுவினால் சுரக்கப்படுகின்ற நச்சுப் பொருளின் (Aflatouxin) உற்பத்தியானது தடுக்கப்படுகின்றது.

### பாத்திரங்களின் சுத்தம்

பால் எடுக்கும் பாத்திரங்கள் அலுமினியம் அல்லது முலாமிடப்பட்ட இரும்பினாலானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் பால் எடுக்கும் வெற்றுப் பாத்திரங்கள் பால் கறத்தலின் பின் உடனடியாக கழுவப்படுதல் வேண்டும். இதற்காக கொதி நீர், கொதிநீராவி அல்லது இரசாயனப் பதார்த்தங்கள் என்பவற்றைப் பயன்படுத்த முடியும்.

இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தியும் (சோடியம் கைப்போ குளோரைட், அயோடோபோர்) சுத்தம் செய்யலாம். இதற்காக அமோனியம் சேர்வைகளின் பயன்பாடும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் Teepol,Vim (விம்) போன்றவற்றைப் பயன்படுத்த முடிகின்றபோதிலும் பாவனையின் பின்னர் அவற்றின் மீதிகள் பாத்திரங்களில் இல்லாதிருக்குமாறு சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

அத்துடன் சாம்பல்,சேறு,மண் என்பவற்றைக் கொண்டு சுத்தம் செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். பாத்திரங்களை கழுவி தலைகீழாக சூரிய ஒளிபடும் படியாக உலர வைப்பது ஒரு சிறந்த செயற்பாடாகும்.

### பசு மடியின் சுத்தம்


- கீழ்வரும் காரணங்களிற்காக ஒவ்வொரு கறத்தல் செயற்பாட்டின் போதும் மடியும் முலைகளும் சுத்தம் செய்யப்படுகின்றன.
- ஒரு பசுவிலிருந்து இன்னொரு பசுவிற்கு மடியழற்சி நோய் (Mastitis) பரவுவது குறைக்கப்படுகின்றது.
- தூசிகள்/ மாசுகள் அற்ற பாலை சேகரிப்பதனால் பாலிலுள்ள நுண்ணுயிர்களின் அளவு குறைக்கப்படுகின்றது.
- அதிகளவு பால் வெளியேறுவதை தூண்டுகின்றது (Stimulus)

மிதமான வெப்பம் 57°C வெப்ப நிலையுடைய) சுடுநீரினால் மடியும் மடிமுலையும் சுத்தம் செய்ப்படல் வேண்டும். இதன்போது பொட்டாசியம் பேர்மங்கனேற் அல்லது சோடியம் கைப்குளோரைட் ஒரு கிள்ளு (சிட்டிகை) நீருடன் சேர்ததல் பயன்மிக்கதாகும்.. பால் மடியை ஈரலிப்பாக வைத்திருத்தல் கூடாது. ஏனெனில் அதிலுள்ள நீர்த்துளிகள் பாலினுள் கலக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளது.

மடியின் ஆரோக்கியத்தைக் கண்காணித்தல்



பசுவின் முதற்பாலைப் பரிசோதித்தல்



மென்மையான கடதாசியினாலான அல்லது துணியினாலான துவாயைப் பயன்படுத்தி மடியை உலர்த்துவது சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பசுவிற்கும் புதிய துணியிலான அல்லது கடதாசியிலான துவாய்களைப் பயன்படுத்துவது சிறந்தது. இங்கு துணியிலான துவாயானது பலதரப்பட்ட தேவைகளிற்குப் பயன்படுத்தப்படுமாயின், பயன்படுத்துவதற்கு முன்னர் தோய்த்து உலர்ந்ததாக இருக்கவேண்டும். ஒவ்வொரு பாவனைக்குப் பின்னரும் சூரிய ஒளியில் உலர்த்தப்பட்ட சுத்தமான துணியைப் பயன்படுத்துதல் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

### முதற்பால் கறப்பு

பாலைப் பௌதீகப் பரிசோதனைக்கு (Physical Examination) உட்படுத்துவதன் மூலம் மடியழற்சி நோயினை (Mastitis) ஆரம்ப நிலையிற் கண்டறிவதுடன் பாவனைக்குதவாத பால் மேலதிக பாலுடன் சேர்வதைத் தடுக்கவும் முடியும். Strip cup ஆனது மேற்கூறப்பட்ட அசாதாரண நிலைமைகளைக் கண்டறியும் பௌதீகப் பரிசோதனைக்கு உதவுகினறது.

### பால் கறத்தல் செயற்பாடு

பால் கறக்கும் போது வெளியேறும் முதற்பாலானது முலையிலுள்ள பால் வெளியேறும் பாதையைச் சுத்தமாக்குகின்றது. இதனால் முதற்பாலானது எடுக்கப்பட்டு பரிசோதித்த பின்னர் பால் கறத்தல் செயற்பாட்டை ஆரம்பிக்கமுடியும்.

உள்ளங்கையையும் எல்லா விரல்களையும் உபயோகித்து பால்கறக்கும்முறையானது (Full Hand Method) மிகச் சிறந்த செயன் முறையாயிருப்பதுடன் முலைகளிற்கும் சாலச் சிறந்தது. முதலில் பால் கறப்பவர் நன்றாகக் கைகளை கழுவி உலர்ந்த சுத்தமான துவாய் மூலம் உலரச் செய்யவேண்டும். அத்துடன் அவருடைய கைகளில் எந்தவிதமான காயங்களும் இருக்கக் கூடாது. பால்கறப்பவரின் கைகளில் காயங்கள் ஏதும் இருப்பின் கையுறைகளை உபயோகித்தல் சிபார்சுசெய்யப்பட்டுள்ளது. பால் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் தொற்று நோய் அற்றவர்களாகவும் தனியாள் சுகாதாரத்தைப் பேணுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். (தொடரும்)

கலாநிதி செல்வி ஜெ.சின்னையா,
இ.மதன்
விலங்கு விஞ்ஞானத்துறை,
தகவல் தொடர்பு மையம்.

# ஜனாதிபதியினதும் இராணுவத் தளபதியினதும் பதவிகளை நீடித்து அரசாங்கத்தை பாதுகாப்பதே யுத்தத்தின் நோக்கம்

## –மங்களசமரவீர எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தமென்ற மாயையை மக்கள் மத்தியில் புகுத்தி மக்களை அரசாங்கம் வசியம் செய் துள்ளது. ஜனாதிபதியினதும், இராணுவத் தளபதியினதும் பதவிக் காலத்தை நீடிப்பதுடன் அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதே யுத்தத்தின் நோக்கமாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவரும் எம்.பி.யுமான மங்களசமரவீர தெரிவித்தார். யுத்தம் இன்று சந்தைப் பொருளாக்கப்பட்டுள்ளது. பூமியின் எல்லைகளைக் கைப்பற்றுவதால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதே நிரந்தரத் தீர்வுக்கு வழி வகுக்கும் என்று அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாதுகாப்பு கண்காணிப்பகத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே மங்கள சமரவீர எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, யுத்தத்தின் உண்மையான நிலைமைகளை மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட பாதுகாப்பு கண்காணிப்பகத்தின் முதலாவது ஊடகவியலாளர் மாநாட்டின் பின்னர் எனக்கும் ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்தோருக்கும் மரண அச்சுறுத்தல்கள் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருகின்றன.

பிரிகேடியர் ஜானக பெரேராவுக்கு ஏற்பட்ட நிலைமை எனக்கும் ஏற்படுமோ எனத் தோன்றுகின்றது. ஆனால் எந்த அச்சுறுத்தல் வந்தாலும் மக்களுக்கான எமது சேவை தொடரும்.

எனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக பாதுகாப்பு தரப்பினருக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதும் இதுவரையில் ஆக்கபூர்வமான எந்தவிதமான நடவடிக்கைகளோ என்னிடம் சாட்சியமோ பெற்றுக்கொள்ளப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக நான் பாராளுமன்றத்தில் தெரிவித்ததோடு சிறப்புரிமை பிரச்சினையையும் கிளப்பினேன். இது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

விடுதலைப்புலிகளின் விமான ஓடு பாதைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் புலிகளின் கடற்படையினர் மீது வெற்றிகரமான தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும் அரசாங்கம் செய்திகளை வெளியிடுகிறது.

இதன்மூலம் மக்களை ஏமாற்றுகிறது. ஆனால் விடுதலைப்புலிகள் ஏழாவது முறையாகவும் கொழும்புக்கு வந்து விமானத் தாக்குதல்களை நடத்திவிட்டுச் சென்றுள்ளனர். இன்னமும் அவர்கள் பலமுடன் இருப்பதையே இது வெளிப்படுத்துகிறது.

யுத்தமென்ற மாயையை மக்கள் மத்தியில் புகுத்தி மக்களை அரசாங்கம் வசியம் செய்துள்ளது. இதன்மூலம் ஜனாதிபதியினதும் இராணுவத்தளபதியினதும் பதவிக் காலத்தை நீடித்துக் கொள்வதும், அரசாங்கத்தை பாதுகாத்துக்கொள்வதுமே நோக்கமாகும். (ஓ-6)

# 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படவில்லை

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பால் அதிகாரங்களைவழங்கக்கூடிய எந்தவொரு யோசனைத் திட்டமும் முன்வைக்கப்படவில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அரசாங்கம் 13ஆவது திருத்தத்திற்கு அப்பாலான ஓர் அதிகாரப் பகிர்விற்கு தயாராவதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்திற்கு அப்பாலான ஓர் தீர்வுத் திட்டம் தொடர்பில் இலங்கை யும் இந்தியாவும் கூட்டு அறிக்கை வெளியிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன குற்றம் சுமத்தியிருந்தார்.

எனினும் இவ்வாறான ஓர் யோசனை குறித்து எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# ‘திரியபியச’ வீடமைப்புத் திட்ட முதலாம் கட்டக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் சமுர்த்தி கமநெகும கிராமசேவகர் பிரிவுகளாகத் தெரிவு செய்யப்பட்ட யா/65, யா/70, யா/74, யா/84, யா/87 பிரிவுகளைச் சேர்ந்த பின்வரும் பயனுகரிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவான ரூபா 30 ஆயிரம் சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் விபரம் வருமாறு வஸ்தியாம்பிள்ளை யூப் பிறேசியா(பாசையூர்), கே.இளங்கோ(குருநகர்), தேவசகாயம் நிர்மலா (இராசாவின் தோட்டம்), செபஸ்ரியாம்பிள்ளை மரியநாயகி (நாவாந்துறை தெற்கு), யோசெப் பத்மநாதன் (நாவாந்துறை வடக்கு), சண்முகம் யோகராசா (சோனக தெரு). இ

# ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்க இராணுவத்தில் 5ஆயிரம் பேர் இணைப்பு

## -பிரிகேடியர் உதயநாணயக்கார தகவல்



(கொழும்பு)

இராணுவத்தில் நிலவும் ஆளணி பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காக சுமார் 5ஆயிரம் பேர் படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களில் ஆறாயிரத்து 749 பேர் இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஆயிரத்து496 பேர் இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அதன் உத்தரவின் பேரில் சிறைவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார் . தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற விஷேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் தொடர்ந்தும் கூறியதாவது,

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்கள் கடந்த நவம்பர் 5 ஆம் திகதிக்குள் மீண்டும் இராணுவத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று இராணுவ தலைமையகத்தால் அறிவிக்கப் பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் அக்காலப் பகுதியில் மட்டும் சுமார் ஆறாயிரத்து 173 பேர் இணைத்துக்கொண்டனர். மேலும் கடந்த வாரப் பகுதியில் மேலும் 800பேர் தமது சேவைகளில் மீண்டும் இணைந்துகொண்டனர்.

இவ்வாறு இராணுவ தலைமையகம் விடுத்த அறிவித்தலுக்குப் பின்னரும் மீண்டும் சேவையில் இணைந்துகொள்ளாதவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். (6)

# ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் விடுதலை செய்யப்படவேண்டும்

## –சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் கட்டுரைகளை எழுதிய ஊடகவியலாளர் உடனடி யாக விடுதலை செய்யப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ்ச் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தொடர்பாக ஊடகங்களில் கருத்து வெளியிட்ட காரணத்திற்காக ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் கடந்த 5 மாதங்களாக பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இலங்கையில் ஊடகங்கள் பெரும் நெருக் கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 10 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்த அவசரகால சட்டம் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-6)

# ஜனநாயக மக்கள் முன்னணியாக மேலக மக்கள் முன்னணி பெயர் மாற்றம்

தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் விடயங்களில் குரல்கொடுத்து வரும் மனோகணேசனின் மேலக மக்கள் முன்னணி கட்சி ஜனநாயக மக்கள் முன்னணி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையில் கடந்த ஏழு ஆண்டுகளாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் மேலக மக்கள் முன்னணியை ஜனநாயக மக்கள் முன்னணி என்று பெயர் மாற்றம் செய்வதற்கு தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம் .வழங்கியுள்ளதாக முன்னணியின் பொதுச் செயலாளர் குமர குருபரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் மனோ கணேசன் தலைவராக இருப்பார் என்றும் முன்னைய செயற்குழு தொடர்ந்தும் செயற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு, களுத்துறை,கம்பஹா ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இதுவரை காலமும் மேலக மக்கள் முன்னணி அரசியலில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மடு தேவாலயத்திற்கு அடியார்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை

## ஐ.தே.க.உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

மன்னார் மடுமாதா தேவாலயத்திற்கு அடியார்கள் செல்ல அனுமதி வழங்கப்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் மடுமாதா ஆலயப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் மாத்திரம் அடியார்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இரவுவேளைகளில் ஏதாவது சம்பவங்கள் இடம்பெற்றால், அது அடியார்களை பாதிக்கும் என்பதன் காரணமாகவே இரவில் அடியார்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என அமைச்சர் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் அனைத்துப் பொருட்களும் கிடைப்பதால்,மதவாச்சி சோதனைச் சாவடியின் ஊடாக பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட ஜயலத் ஜயவர்த்தன தென்னிலங்கையின் கிறிஸ்தவக் குருக்களும் மடுவுக்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை எனக் குற்றம் சுமத்தினார்.

பௌத்தர்களை தலதா மாளிகைக்கு செல்லவேண்டாம் எனக் கூறினால்,மதக் குருமார் என்ன செய்வர் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.(ஓ-6)

# நெடுந்தீவு கடற்பகுதியில் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள்

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் தப்பிக்க இராமேஸ்வரம் மீனவர்கள் நெடுந்தீவு கடல் பகுதியில் மீன்பிடித்து திரும்பினர். இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நிர்வாணப்படுத்தி தாக்கி மீன்பிடிச் சாதனங்களையும் சேதப்படுத்தி கடலில் வீசினர்.

காயமடைந்த மீனவர்கள் பலர் சிகிச்சை பெற்று தங்களது ஊர்களுக்கு திரும்பினர். மீன்பிடி வலை மற்றும் சாதனங்கள் சேதமடைந்த படகு உரிமையாளர்களும் படகுகளை மீன்பிடிக்க அனுப்பவில்லை. கடற்படையினரின் தாக்குதலில் மிரண்டு போன மீனவர்கள் தற்போது நெடுந்தீவு கடல்பகுதிச் சென்று மீன் பிடித்து திரும்புகின்றனர்.

கடந்த புதன்கிழமை மீன்பிடிக்க சென்று கரை திரும்பிய மீனவர்கள்கூறுகையில் கச்சதீவுக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் மீன்பிடிக்க சென்றால் இலங்கை கடற்படையினர் தாக்குதலில் சிக்க நேரிடும் இதிலிருந்து தப்பிக்க நெடுந்தீவு கடல் பகுதிக்கு சென்று மீன் பிடித்து திரும்பியதாக தெரிவித்தனர். (ஓ-6)

அகமுடையானை எமனுக்குக் கொடுத்தாலும் - கொடுப்பேன்,சக்களத்திக்குக் கொடுக்க மாட்டேன்.

- வங்காளம்

வலம்புரி

## ஜனாதிபதி மகிந்தவின் அறிவிப்பு; இந்தியாவின் நடவடிக்கை என்ன?

போர் நிறுத்தம் செய்ய முடியாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவின் இந்த அறிவிப்பு இந்தியாவில் வைத்து -இந்தியப் பிரதமரிடம் தெரிவிக்கப்பட்டமைக்கு ஜனாதிபதி மகிந்தவின் அபாரத் துணிச்சலா? அல்லது பிரதமர் மன்மோகன் சிங்கின் மிக மோசமான பலவீனமா? காரணம் என்ற கேள்வி மக்களிடம் எழுவது நியாயமானதே.

யுத்தம் நிறுத்தம் செய்ய முடியாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் கூறியிருந்தார். அதனையே இந்தியாவிலும் கூறியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்த நிறுத்தம் செய்ய முடியாதென நிறுத்திட்டமாக கூறியதிலிருந்து இந்தியாவின் வல்லாதிக்கம் பலவீனமடைந்துவிட்டதென்ற முடிபுக்கு வருவது சரியானதா? அல்லது இலங்கை ஜனாதிபதியிடம் இவ்வாறுதான் கூறும்படி இந்திய மத் திய அரசு ஆலோசனை வழங்கியதா? என்ற ஆய்வு தேவையானதாகவுள்ளது.

எதுவாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மேற்போர்ந்த அறிவிப்பு தமிழகத்திற்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

அதாவது இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யவேண்டுமென தமிழக சட்டசபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால் இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் யுத்த நிறுத்தம் செய்ய முடியாதெனக் கூறியுள்ளார்.

அவ்வாறாயின் தமிழக சட்டசபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்னவாகும்? ஆக, இலங்கைப் பிரச்சினையில் இந்தியா காய்க்குள் பழமோடுகின்றது.

தமிழகத்தின் சுய கௌரவம் எதனையும் மத்திய அரசு கவனத்தில் கொள்ளவில்லை. ஈழத் தமிழருக்கு ஆதரவாக தமிழகத்தில் எழுந்துள்ள ஆதரவு அலையை முறியடிப்பது எப்படி என்பதே மத்திய அரசின் நினைப்பு.

இதனாலேயே எனது தந்தை கொல்லப்பட்டு பதினாறு வருடங்களாகியும் இன்னமும் நீதி கிடைக்கவில்லை என ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் காந்தி தெரிவித்திருந்தார்.

பதினாறு வருடங்கள் மௌனமாக இருந்த ராகுல் காந்தி இவ்வாறு குறிப்பிட்டதற்குக் காரணம் என்ன? தமிழகத்தில் எழுந்துள்ள ஈழத்தமிழர் ஆதரவு அலையை முறியடிப்பதற்காக இந்த அஸ்திரத்தைப் பயன்படுத்துமாறு ராகுல் காந்திக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் சோனியா காந்தி மறைமுகப் பிரதமராக இருக்கும்போது பிரதமர் மன்மோகன் சிங் யார் எதைக்கூறினாலும் ஆமா போடுவதைத் தவிர வேறு வழியென்னதான் இருக்கிறது.

# ஐயப்ப விரதமும் முறைகளும்

இந்தியாவின்அழகு கொஞ்சும் கேரளத்தை பரசுராமர் எனும் முனிவர்உருவாக்கினார்.அதில் பல்வேறிடங்களிலிருந்து பிராமணர்களைஅழைத்து குடியேற்றினார். அங்குள்ள பதினெட்டு மலைகளில் தர்மசாஸ்தாவின் திருக்கோயில்களை அமைத்தார்.அதில் பிரதானமானது சபரி மலை சாஸ்தா கோவில். இச் சபரி மலையில் வீற்றிருக்கும் ஐயப்பன் கலியுக வரதன் எனவும் அழைக்கப்படுகின்றார்.

### புராண வரலாறு

மகிஷாசுரன் எனும் அரக்கன் துர்க்கையினால் வதம் செய்யபட்டான். இதனால் கோபமுற்ற இவ் அரக்கனின் தங்கை மகிஷி தேவர்களை பழிவாங்க பிரம்மனை நோக்கி தவம் இருந்து சாகா வரம் பெற்றாள். இவ் அரக்கியை அழிப்பதற்காக திருமால் அழகிய மோகினி அவதாரம் எடுத்தார். இவ் மோகினிக்கும் சிவனுக்கும் அவதரித்த குழந்தை தான் ஐயப்பன் ஆவார். திருமாலுக்கும் சிவனுக்கும் அவதரித்த குழந்தை ஆனதால் ஐயப்பன்அரிகரசுதன் எனவும் அழைக்கப்படுகிறார். ஐயப்பன் சிவவைணவஜக்கியத்திற்கு எடுத்து காட்டாகவும் விளங்குகின்றான். அத்துடன் இஸ்லாமியர்களுக்கும் சபரிமலையுடன்தொடர்பு

**நாளை ஐயப்பன் விரதாரம்பம்**

காணப்படுகின்றது.

ஐயப்ப விரதம் வருடந்தோறும் கார்த்திகை தமிழ் மாதம் 1ஆம் திகதி ஆரம்பமாகி தமிழ் தை மாதம் 1 ஆம் திகதி வரை (தைப் பொங்கல்) அனுஷ்டிக்கப்படுகிறது.கார்த்திகை 1ஆம் திகதி விரதம் இருக்க ஆரம்பிக்கும் பக்தர்கள் பெற்றோரை வணங்கி குருசாமியின் உதவி கொண்டு மாலை அணிதல் வேண்டும். குரு சாமி ஆனவர் பல தடவைகள் சபரிமலைக்கு பல பக்தர்களை அழைத்து சென்று வருபவராக இருப்பர்.

☯ விரத காலத்தில் கறுப்பு,நீல நிற வேட்டி ,சால்லை போன்ற வஸ்திரங்களை அணிதல் வேண்டும்.

☯ உருத்திராட்சமாலை ,துளசி மாலை என்பவற்றை அணிதல் வேண்டும்.

☯ நாள் தோறும் விடியற் காலை, மாலை நேரங்களில் குளிர்ந்த நீரில் குளித்து காலை, மதியம் ,மாலை போன்ற நேரங்களில் சரணங்கள் சொல்லி ஐயனை வணங்குதல் வேண்டும்.

☯ விரத காலங்களில் பிரமச்சாரியம் மிக மிக இறுக்கமாக கடைப்பிடித்தல் அவசியம்.

☯ விரத காலங்களில் முடி மற்றும் நகம் அகற்றுதல் , முகச் சவரம்செய்தல், சீப்பு ,சவர்க்காரம் போன்ற பொருட்களை பாவித்தல் என்ப ன தவிர்க்கப்படல்வேண்டும்.

☯ சூது ,வாது , பொறாமை ,கள்ளத்தன்மை , மது அரு ந்தல் ,புகைப்பிடித்தல் ,வெற்றிலை போடுதல் , சினம் ,புலால் உண் ணுதல் போன்ற செயற் பாடுகள் விலக் கப்படல் வேண்டும்.



☯ சகல நேரங்களிலும் ஐயனை மனதில் நினைத்தல் வேண்டும்.

☯ உறங்கும் போது கட்டில், மெத்தை தலையணை என்பவற்றைப் பயன்படுத்தல் கூடாது. சிறிய துண்டொன்றை பயன்படுத்தி உறங்கல் வேண்டும்.

☯ நாள் தோறும்பாத பூசைசெய்ய வேண்டும்.

☯ சாமி மா ர் கள் மற்றவர்களு க்கு எவ்வித துன் பமும் தரக்கூடாது. விரத்தில் 41 ஆம் நாள் முடி வில் சபரிமலை நோக்கி யாத்திரை செல்லுதல் வேண்டும்.

☯ யாத் திரை யின்பொழுது குரு சுவாமியினால் தலையில் ஏற்றப்படும் இரு முடியை சுமந்து செல்லல் வேண் டும். யாத்திரைசெல்லும் பொழுது சாமியே சரணம் என்ற கோஷம் ஒலிக்க வேண்டும்.

☯ கன்னி சுவாமிமார்கள் பெரு வழிப்பாதையினால் சென்று வருவது மிகவும்நல்லது.

☯ யா த்திரையில் ஐயனின் சன்னிதானத்தை அடைந்த பின்னர் இறுதியில் மகர ஜோதியை தரிசித்து விட்டு வீடு திரும்பல் வேண்டும். பின்னர்குருசுவாமி மூலம் மாலை யைக் கழற்றி ஐயப்பன் திருவுருவப் படத்திற்கு அணி வித்து விரதத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.இவ் விதம் விரதத்தை அனுஷ்டித்து ஐயப்பனின் அருட் கடாட்சத்தை பெறலாம்.

பிரம்ம ஸ்ரீ கி. அரிகரசுதன் சர்மா
குருசுவாமி

# 13ஆவது திருத்தச் சட்ட மூலம் பொருத்தமானதல்ல எனக்கூறியும் அதனை முன்வைக்க அரசு முயற்சி

## சபையில் சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் முன் வைக்கப்பட்டால் அதனைத் தொட்டுக்கூடப் பார்க்கத் தாம் தயாராகவில்லையென தமிழ் தேசியக் கூட்ட மைப் பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

13வது திருத்தச் சட்ட மூலம் பொருத்தமானது அல்ல எனக் கூறி தமிழர் விடுதலைக் கூட்டணி அதனை நீண்ட காலத்துக்கு முன்னரே நிராகரித்து விட்டதெனவும் தற்பொழுது மீண்டும் அதனை முன்வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகவும் சம்பந்தன் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

கிழக்கு மகாணத்தை விடுவித்து மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு அங்கு ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டு விட்டது என அரசாங்கம் கூறுகிறது . ஆனால் கிழக்கு மாகாணசபை உள்ளூராட்சி சபைகளை விட மோசமாகவே செயற்பட்டு வருகிறது.மாகாண சபைக்கான அதிகாரங்கள் வழங்கப்படாமையே இதற்குக் காரணம் என அவர் குற்றஞ் சாட்டினார்.

வடக்கு கிழக்கைப் பிரித்த அரசாங்கம் அதற்கு மாற்றீடான தீர்வொன்றை இதுவரை முன்வைக்கவில்லையெனவும், இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்க்கப் போவதாகக் கூறிக் கொண்டு அப்பாவித் தமிழர்கள் மீது அரசாங்கம் இராணுவ ரீதியான தாக்குதல்களை மேற்கொள்வதாகவும் சம்பந்தன் கூறி னார்.

தமிழர்கள் பிரிந்து செல்ல அனுமதித்தல் அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை முன் வைத்தல் அல்லது தமிழர்க ளை முற்றாக கொன்றொழி த்தல் ஆகிய மூன்று சம்பவங்களில் ஒன்று நிறை வேற்றப்பட்டாலே இலங்கையின் இனப் பிரச்சினை முடிவுக்கு வரும். இல்லா விட்டால் மேலும் 30வருடங்களுக்கு இனப்பிரச்சினை தொடர்ந்து செல்லும் என அவர் குறிப்பிட்டார்.

கிழக்கை மீட்ட போது அங்குள்ள அப்பாவி மக்கள் மீது குண்டுகளை வீசி அவர்களைச் சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றி மரங்களிலும் பொது இடங்களிலும் தங்க வைத்து விட்டு கிழக்கை விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்டு விட்டதாக அ ரசா ங்கம் மா ர் தட்டிக் கொள்வதாக சம்ப ந்தன் கூறினார்.

தனது கோரிக்கைக்கு அரசாங்கம் இதுவரை எந்தவிதமான நட வடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தனது கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் மீண்டும் வேண்டுகோள் விடுத்தார். இலங்கையின் இனப் பிரச்சினை விடயத்தில் தற்பொ ழுது இந்தியாவின்அக்கறை அதிகரித்திருப்பதுடன்இந்தியா கோரிக்கை விடுப்பதைப் போன்று தமிழர்களின் நலன் குறித்து இலங்கை அரசாங்கம் அக்கறை செலுத்துவதில்லை என சம்பந்தன் குறிப்பிட்டார். (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி செயல் புரியும் விதம்



எவ்வாறு வேலை செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்வதால் என்ன பயன்? ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் ஏதாவது ஒரு வழியில் வேலைகள் செய்து கொண்டுதானே இருக்கிறார்கள்! என்று கேட்கலாம். ஆனால் ஆற்றல்களை வீணடிப்பது என்று ஒன்று இருக்கிறது. சாதுரியமாகவும் ,ஒரு விஞ்ஞானம் போல் நுணுக்கமாகவும் செயல் புரிவதே கர்மயோகம் என்று பகவத் கீதை கூறுகிறது. எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிந்து செய்வதன் மூலம் ஒருவன் பெரிய பலன்களை அடைவான்.

அனைத்து செயல்களும் நம் மனத்துள் ஏற்கனவே இருக்கின்ற ஆற்றலை வெளியே கொண்டு வருவதற்கான ஆன்மாமை விழிப்புணர்த்துவதற்கான முயற்சிகள் மட்டுமே என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும் . ஆற்றல் மனிதனுள் இருக்கிறது. அது போலவே அறிவும்அவனுள்ளேயே இருக்கிறது. அவற்றை வெளியே கொண்டு வருவதற்காக இந்த மாமனிதர்களை விழிப்புணர்த்துவதற்காகத் தரப்படும் அடி போன்றதே பல்வேறு செயல்கள்.

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- தமிழ்மொழியும் இலக்கியமும் I

### பகுதி I

*பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.*

1. நான் எப்போதும் என் இச்சைப்படி நடப்பேன். இச்சை என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
   1) ஆசை 2) விருப்பம் 3) அவா 4) பேராசை
2. வானில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டின. நட்சத்திரம் என்பதன் ஒத்த கருத்து சொல்.
   1) சந்திரன் 2) சூரியன் 3) உடு 4) வெள்ளி
3. அகிம்சை வீரத்தனத்தின் சிகரமேயன்றி கோழைத்தனமன்று. இங்கு அகிம்சை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
   1) அன்பு 2) மறம் 3) கெட்டித்தனம் 4) இம்சை
4. தருமர் மானம் பெரிதென வாழ்ந்தார். இங்கு மானம் என்பதன் எதிர்ச் சொல்.
   1) அவமானம் 2) மதிப்பு 3) புகழ் 4) கீழ்மை.
5. உசிர் என்பது எவ்விடம் கிளை மொழி
   1) கிழக்கு 2) வடக்கு 3) தெற்கு 4) மலையாளம்

*பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.*

6. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் உரை .............................. எனக் கூறப்படும்
   1) முன்னுரை 2) அணிந்துரை 3) வாழ்த்துரை 4) நன்றியுரை
7. தொலை என்ற வினைச் சொல்லுடனும் பெயர் என்ற பெயர்ச் சொல்லுடனும் .............................. என்ற கூட்டுப் பெயர் உருவாகும்.
   1) தொலையாட்சி 2) தொலை காட்சி 3) தொலைக்காட்சி 4) தொலைமாட்சி
8. விவசாயி .............................. அயராது உழைத்தான்.
   1) அல்லும் பகலும் 2) ஒடி ஆடி 3) அரைகுறை 4) ஆடிப்பாடி
9. குறித்த ஒரு நாளில் நீதிமன்றுக்குச் சமூகம் தரும்படி நீதிபதி .............................. விடுத்தார்.
   1) கட்டளை 2) அழைப்பு 3) வேண்டுகோள் 4) அழைப்பானை
10. வயோதிபர் ஒருவர் வாகனம் மோதி .............................. அடைந்தார்.
    1) மரணம் 2) அகாலமரணம் 3) மூச்சு 4) களைப்பு

*பின்வரும் செய்யுளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.*

"கடலின் மீது கதிர்களை வீசிக்
கடுகி வானொலி இன்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்
உடல் பரந்த கடலுந் தனுள்ளே
ஒவ்வோர் துண்டுளியும் வழியாகச்
சுடரு நின்றன் வடிவையுட் கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே".

11. இச்செய்யுள் உணர்த்தும் பிரதான கருத்து
    1) சூரியன் தோற்றம் பற்றியது.
    2) கடலின் அழகைக் கண்டு புட்கள் மகிழ்கின்றன.
    3) புட்கள் பாட்டுப் பாடுகின்றன.
    4) சூரியன் காலையில் உதிப்பதைக் கண்டு புட்கள் மகிழ்கின்றன.
12. புட்கள் என்பது எதனைக் குறிக்கின்றது.
    1) பறவைகள் 2) வானம்பாடி 3) கிளிகள் 4) மயில்கள்
13. வானொளி என்பதைப் பிரித்து எழுதினால்
    1) வாள் + னொளி 2) வா + ஒளி 3) வாள் +ஒளி 4) வான் +ஒளி
14. புட்கள் ஏன் மகிழ்கின்றன.
    1) சூரியனைக் கண்டு
    2) சூரியக் கதிர்களை வீசி ஒளி பரப்புவதைக் கண்டு
    3) வானம் வெளிச்சமாக இருப்பதைக் கண்டு
    4) கடலில் சூரியனைக் கண்டு
15. இப்பாடலைப் பாடியவர்கள் யார்?
    1) சோமசுந்தரப் புலவர் 2) நு. ்.மான்
    3) பாரதியார் 4) சின்னத்தம்பிப்புலவர்

*பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

16. சொப்ட்வெயார் (Software) என்பது
    1) வன்பொருள் 2) எண்மானம் 3) மென்பொருள் 4) இறுவட்டு
17. கிழத்தி, இல்லாள், துணைவி என்பன குறிப்பது
    1) கிழவி 2) பரத்தை 3) பாடினி 4) மனைவி
18. காவல், வாசனை, சிறப்பு, களிப்பு, அச்சம் என்பன குறிப்பது
    1) கடி 2) மனம் 3) புகழ் 4) சந்தோசம்
19. மனிதனுக்கு மனநிறைவைப் போன்று சுகமளிக்கும் செல்வம் வேறொன்றுமில்லை என்பதை உணர்த்தும் பழமொழி.
    1) பொறுத்தார் பூமியாழ்வார் பொங்கினார் காடாள்வார்
    2) போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
    3) பேராசை பெருந்தரித்திரம்
    4) கண்கெட்ட பின் சூரிய வணக்கமா?
20. தென்னையின் இளங்காய் குரும்பை என்பது போல மாவின் இளம் பிஞ்சு
    1) மாங்காய் 2) பிஞ்சு 3) வடு 4) கச்சல்
21. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்
    1) நிலம் 2) சூரியன் 3) ஆகாயம் 4) தட்டு
22. பின்வரும் சொற்களில் இரட்டை மொழியாக அமைவது.
    1) கசகச 2) கண்ணீடும் கம்பலையும்
    3) மேடுபள்ளம் 4) ஆடிப்பாடி
23. கங்கணங்கட்டல் என்ற மரபுத் தொடரின் பொருள்
    1) ஒற்றைக்காலில் நிற்றல் 2) அவதானமின்மை
    3) செயலை முடிக்க முனைந்து நிற்றல் 3) தகாத செயல்
24. நெடுவானக்கு மாத்திடை வெண்ணிலாவே இவ்வடியில் வந்துள்ள அணி
    1) உவமை 2) உருவகம்
    3) தற்குறிப்பேற்றம் 4) உயர்வுநவிற்சி
25. பயன்படாத கல்வியறிவு என்ற பொருளைத் தரும் தொடர்பு
    1) ஏட்டுச் சுரக்காய் 2) அரைப்படிப்பு
    3) நுனிப்புல் மேய்தல் 3) எழுத்தெண்ணிப் படித்தல்

*பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

26. இயல்புப் புணர்ச்சியாக அமைவது
    1) பலாப்பழம் 2) மாவிலை 3) குளக்கரை 4) மாமரம்
27. நிலங்கடந்தவன் என்பது
    1) வினைத்தொகை 2) வேற்றுமைத் தொகை
    3) பண்புத் தொகை 4) உம்மைத் தொகை
28. கடிகாரம் என்பது
    1) எழுவாய்த் தொடர் 2) விளித்தொடர்
    3) அடுக்குத் தொடர் 4) உரிச் சொற்றொடர்
29. தொழிற் பெயர் விகுதிகளாக அமைவது
    1) அர், ஆர் 2) தல், அது, மை 3) க, இய, இயர் 4) அள், ஆள்
30. விழுந்தவனை மாடேறி மிதித்தது. இதில் விழுந்தவன் என்பது
    1) வினைச் சொல் 2) தொழிற் பெயர்
    3) வினையாகு பெயர் 4) பெயர்ச் சொல்

*பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

31. கத்தரி வெருளியா மனிதனா இவ்விடத்தில்.
    1) நிற்பது 2) நிற்பவன் 3) மனிதனன்று 4) மனிதனல்ல
32. ஒவ்வொரு
    1) பழங்களும் நல்லவை 2) பழமும் நல்லது
    3) பழங்களும் நல்லது 4) பழங்களும் நல்லன
33. நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற வாக்கியம்
    1) திணை வழு 2) பால் வழு 3) எண் வழு 4) இட வழு
34. நாதனும் விமலாவும் கோயிலுக்குச்
    1) சென்றார்கள் 2) சென்றான் 3) சென்றாள் 4) சென்றது
35. தண்ணீர் என்பதை பிரித்து எழுதினால்
    1) தண்+ நீர் 2) தண்மை+ நீர்
    3) தண்+ ணீர் 4) தண்மை +ணீர்

*பின்வரும் செய்வினை வாக்கியங்களை செயற்பாட்டு வாக்கியங்களாக மாற்ற வருவது*

36. இராமன் இராவணனைக் கொன்றான்
    1) இராமன் இராவணனைக் கொன்று விட்டான்.
    2) இராமனால் இராவணன் கொல்லப்பட்டான்.
    3) இராவணனை இராமன் கொன்றான்.
    4) இராவணனை இராமன் கொன்றுவிட்டான்.
37. பறவைகள் பழங்களை உண்டன.
    1) பறவைகள் பழங்களை உண்டு விட்டன.
    2) பறவைகள் பழங்களை உண்டன.
    3) பறவைகளால் பழங்கள் உண்ணப்பட்டன.
    4) பழங்களைப் பறவைகள் உண்டன.
38. பாரதி பல பாடல்களைப் பாடினார்.
    1) பாரதியாரால் பல பாடல்கள் பாடப்பட்ட்து.
    2) பல பாடல்களைப் பாரதியார் பாடினார்.
    3) பாரதி பல பாடல்கள் பாடினார்
    4) பாரதி பல பாடல்களைப் பாடி முடித்தார்.
39. சொல் உருபாக அமைவது
    1) ஐ 2) ஆல் 3) கொண்டு 4) கண்
40. கீழே உள்ள வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும் அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

    a). பழையவற்றுக்கும் புதியவற்றுக்கும் இடையிலான முரண்பாடுகளும், மாறுதல்களும் வரலாற்றில் முடியாதனவாகவே காணப்படுகின்றன.
    b). இவை புதிய கட்டுப்பாடுகளையும் நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தக் கூடும் என்பதனையும் மறந்து விடலாகாது.
    c). இக்கட்டுப்பாடுகளை அகற்றி, வளர்ச்சிக்கு அடிகோலுவது கண்டு பிடிப்புகளும் சாதனங்களும் நடவடிக்கைகளுமே ஆகும்.
    d). மனிதருக்கு வியத்தகு வல்லமையினை வழங்கும் கருவிகளும் தொழில்நுட்பங்களும் ஆபத்துக்கள் பலவற்றுக்கு இடமாகவும் உள்ளன.

# யுவராஜ் சிங் 'ரன்' மழை; இந்தியா அசத்தல் வெற்றி



யுவராஜ் சிங் மின்னல்வேக சதத்தின் மூலம் முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 7 ஒரு நாள் போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரில் முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று ராஜ்கோட்டில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் பீற்றர்சன் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

**சிறப்பான ஆரம்பம்**

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக்-காம்பீர் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் சேவாக் தனது 44ஆவது பந்தில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 16.5 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் காம்பீரும் அரைச்சதத்தை பெற்றார். எனினும் இந்திய அணி 19.5 ஓவர்களில் 127 ஓட்டங்களை எடுத்த நிலையில் காம்பீர் 51 ஓட்டங்களுடன் பட்டேலின் பந்து வீச்சில் ஷாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரெய்னா சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 23.5 ஓவர்களில் 150 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய சேவாக் 73 பந்துகளில் (10 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) அடங்கலாக 85 ஓட்டங்களை எடுத்தபோது பட்டேலின் பந்து வீச்சில் பெல்லிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 3-வது விக்கெட்டுக்காக ரெய்னாவுடன் இணைந்த யுவராஜ் சிங் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென அதிகரித்தது.

இதில் யுவராஜ் சிங் தனது 42 ஆவது பந்தில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

எனினும் இந்திய அணி 36.5 ஓவர்களில் 242 ஓட்டங்களை எடுத்த போது ரெய்னா 43 ஓட்டங்களுடன் பிளின்டொப்பின் பந்து வீச்சில் கொலிங்வூட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய யூசுப் பதான் வந்த வேகத்திலேயே ஓட்டமெதனையும் எடுக்காமல் ஹார்மிஷனின் பந்து வீச்சில் பெல்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

**யுவராஜ் கலக்கல்**

தொடர்ந்து அணித்தலைவர் தோனி களமிறங்கி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் மின்னல் வேகத்தில் துடுப்பெடுத்தாடிய யுவராஜ் சிங் வாணவேடிக்கை காட்டினார். இந்த ஜோடியின் அதிரடியான ஆட்டத்தில் இந்திய அணி 43.3 ஓவர்களில் 300 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் அதிரடியாக ஆடிய யுவராஜ் சிங் 64 ஆவது பந்தில் தனது 9-வது சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த ஜோடி ஓவருக்கு சராசரியாக 10 ஓட்டங்களை எடுக்க, இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 46.4 ஓவர்களில் 350 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் 5 ஆவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 9.4 ஓவர்களில் 105 ஓட்டங்களை எடுத்தபோது சிறப்பாக ஆடிய தோனி 32 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) உட்பட 39 ஓட்டங்களை எடுத்து ஹார்மிசனின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரோகித் சர்மாவும் சிறப்பாக ஆட இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 387 ஓட்டங்களை குவித்தது.

இதில் ஆட்டமிழக்காமல் யுவராஜ்சிங் 78 பந்துகளில் (16 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள்) அடங்கலாக 138 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹார்மிசன், பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிளின்டொப் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 388 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

அந்த அணி 3.2 ஓவர்களில் 12 ஓட்டங்களை எடுத்தபோது பிறிர் 4 ஓட்டங்களுடன் முனாப் பட்டேலின் பந்துவீச்சில் சேவாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

**வந்தார் சகீர்கான்**

தொடர்ந்து களமிறங்கிய ஓ வை ஷா ஓட்டமெதனையும் எடுக்காமல் சகீர்கானின் பந்து வீச்சில் சேவாக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் பீற்றர்ஸன் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார். எனினும் மறுமுனையில் நிதானமாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பெல் 25 ஓட்டங்களுடன் ஷசீர்கானின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய பிளின்டொப் 4 ஓட்டங்களைப் மாத்திரமே எடுத்த நிலையில் சகீர்கானின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்து 11 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 38 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது. இந்நிலையில் பீற்றசனுடன் ஜோடி சேர்ந்த கொலின் வூட் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி விக்கெட் சரிவிலிருந்து மீட்டெடுத்தார். எனினும் ஹொலின் வூட் 19 ஓட்டங்களை எடுத்த போது ஆர்.பி.சிங்கின் பந்து வீச்சில் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய பட்டேல் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணி 26.5 ஓவர்களில் 150 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் பீற்றர்சன் தனது 46 ஆவது பந்தில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். பட்டேலும் 28 பந்துகளில் 28 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஹார்பஜன் சிங்கின் பந்துவீச்சில் தோனியினால் ஸ்ரெம் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அடுத்து பொப்ரா களமிறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பீற்றர்சன் 63 ஓட்டங்களுடன் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய பிரோட் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார்.

மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பொப்ரா 37-வது பந்தில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய இங்கிலாந்து அணி 35.4 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் பிரோட் 26 ஓட்டங்களை எடுத்த போது சேவாக்கின் பந்துவீச்சில் காம்பீரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹார்மிசன், அன்டர்சன் ஆகியோர் ஓட்டமெதனையும் எடுக்காமல் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 37.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இதில் பொப்ரா ஆட்டமிழக்காமல் 38 பந்துகளில் (2பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் சகீர்கான் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார், ஆட்டநாயகனாக இந்தியாவின் வெற்றிக்கு ஓட்டங்களால் மழை பொழிந்த யுவராஜ் சிங் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் நடைபெறுகின்றது. (5)

# வலிகாமம் கல்வி வலய உதைபந்தாட்டத் தொடரில் அருணோதயா, அராலி இந்து, மானிப்பாய் இந்து சம்பியன்



(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் 13,16 மற்றும் 18 வயதுப் பிரிவுகளில் முறையே அருணோதயாக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் சம்பியனானது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 13, 16 மற்றும் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய இரு மைதானங்களில் கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்று வந்தது.

இதில் முதல் சுற்று ஆட்டங்கள் அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று 13 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகிய அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பெற்றதுடன், மூன்றாமிடம் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அணிக்கு கிடைத்தது.

மற்றொரு 16 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் அராலி இந்துக் கல்லூரி அணியும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மோதின.

இறுதிவரை விறு விறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் குறித்த ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் ஒன்றையும் போடாத நிலையில் ஆட்டம் சமநிலையானது.

எனினும் வெற்றியை நிர்ணயிக்க இரு அணிகளுக்கு 5 மேலதிக உதைகள் வழங்கப்பட்டது.

இதில் அராலி இந்துக் கல்லூரி அணியும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணியும் தலா 3 கோல்களைப் போட மீண்டும் ஆட்டம் சமநிலையானது.

தொடர்ந்து வழங்கப்பட்ட மேலதிக உதையிலும் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காத நிலையில் ஆட்டம் சமனானது.

எனினும் தொடர்ந்து நான்காவது முறையாக வழங்கப்பட்ட மேலதிக உதையில் அராலி இந்துக் கல்லூரி அணி ஒரு கோல் போட்டு 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதில் இரண்டாம் இடத்தை ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணி, மூன்றாமிடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டன.

தொடர்ந்து நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணியும் மோதின.

இப்போட்டியில் இரு அணிகளும் இறுதி வரை சவாலாக விளையாடிய போதும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம் பியனானது. இதில் இரண்டாமிடத்தை ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணி பெற்றுக் கொண்டதுடன் மூன்றாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வென்றது. (5)

# தனியார் தொலைக்காட்சிகளை கட்டுப்படுத்தும் வர்த்தமானிக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை

(கொழும்பு)

தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களை கட்டுப்படுத்தும் வகையில் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்துள்ளது. வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக எம்.ரி.வி. தனியார் தொலைக்காட்சி நிறுவனம் உட்பட 11 அமைப்புக்கள் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் மீதான பூர்வாங்க விசாரணையின் போதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையில் நீதியரசர்களான சிரானி திலகவர்த்தன, கே. சிறிபவன் ஆகியோர் முன்னிலையில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் பூர்வாங்க விசாரணை நேற்று நடைபெற்றது. இதன்போது மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கு இடைக்கால தடை விதித்தனர். (ச-5)

## பொதுக்கூட்டமும் தேர்தலும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தெல்லிப்பழைப் பிரிவின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் தேர்தலும் நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் கௌரவ செயலாளர் கு.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ச-3)

## நலன்புரி...

இடம்பெற்று வரும் கடும் மோதல்கள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மண்டைதீவு மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளுக்கு வந்தடைந்தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் பொலிஸாரால் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ-5)

## பாதுகாப்பு உத்தரவாதத்...

பாதையை பயன்படுத்துவதானது பொதுமக்களுக்கும் எமது அலுவலர்களுக்கும் பாதுகாப்பானது என்ற உத்தரவா தங்களை அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து பெற்றுக் கொண்ட நிலையிலேயே இது சாத்தியமாகியுள்ளது.

ஓமந்தை கடவையை திறக்கவோ அன்றேல் மூடுவதற்கோ உரித்தான ஆணையை செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு கொண்டிருக்கவில்லை என்பதை விளங்கிக் கொள்வது பிரதானமானது.

மாறாக இருதரப்பினரும் இணக்கம் கண்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே ஓமந்தைக்கடவை திறக்கப்படுகின்றது தற்போதைய நிலையில் நேற்றைய தினத்தைப் பொறுத்தவரையில் இருதரப்பினருக்குமிடையிலான உடன்பாட்டின் அடிப்படையில் ஓமந்தைக் கடவை 4 மணித்தியாலங்கள் திறக்கப்பட்டது. நேற்றைய தினம் காலை 10 மணிமுதல் மாலை 2 மணிவரையில் எமது அலுவலகர்கள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் 2 இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் இருபக்கங்களிலிருந்துமாக ஓமந்தை கடவையை பயன்படுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் பணியின் நிமிர்த்தமாகவோ அன்றேல் மருத்துவ தேவைகளின் நிமிர்த்தமாகவோ, அன்றேல் குடும்ப அங்கத்தவர்களைக்காண் பதற்காகவோ ஓமந்தைக்கடவையை பயன்படுத்தியுள்ளனர் என்றார். (ச-5)

## பிரபாகரன் சரணடைந்...

அரசு மூலமாகத்தான் இதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்ல முடியும்.

கொந்தளிப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்தி ஏதோ நாமே ஆயுதம் எடுத்து இலங்கைக்குப் போய் போராட வேண்டும் என்ற தொனியில் பேசுகின்றார்கள் என்றார்.

அதற்கு பா.ம.க., ம.தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொடர்ந்து ஞானசேகரன் பேசியதாவது,

நமக்கென ஒரு எல்லை உண்டு. அந்த எல்லைக்குட்பட்டுத்தான் பிரச்சினையை அணுக வேண்டும். அந்த வகையில் முதல்வர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

ராஜீவை இழந்த நிலையிலும் இதை காங்கிரஸ் கட்சியும் கூட ஆதரித்து ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேறியது. பிரதமரைத் தொடர்பு கொண்டுதான் முதல்வர் நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர இப்போதே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறுவது சரியல்ல என்றார்.

பா.ம.கவினர் தொடர்ந்து எதிர்ப்புக் குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தனர். அப்போது விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் கூட்டமாக இருந்தால் அங்கே போய்ப் போராடுங்கள். விடுதலைப்புலிகளுக்கு வால் பிடிக்கும் கூட்டம் எல்லாம் இங்கே பேசக் கூடாது என ஞானசேகரன் கூறினார்.

கொந்தளிப்பு என்றெல்லாம் கூறி பிரச்சினையைத் திசை திருப்பி குளிர் காய நினைப்பதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்றார் ஞானசேகரன்.பா.ம.கவினரின் எதிர்ப்புக் குரல் தொடர்ந்த நிலையில் அதற்கு எதிராக காங்கிரஸாரும் கோஷம் எழுப்பினர். (ச-5)

## கிழக்கு மாகாண முதல...

தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளர் குமாரசுவாமி நந்தகோபன் (வயது-42), கார்ச் சாரதியான சமீர் (வயது-26) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இந்தச் சம்பவம் குறித்துக் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, நேற்று காலை கொழும்புக்கு 18 கிலோமீற்றர் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள அத்துருகிரிய என்னும் பகுதியில் இருவர் கார் ஒன்றினுள் வைத்து இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் இவர்களில் ஒருவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் செயலாளர் என்றும் மற்றையவர் அவரது வாகனச் சாரதி என்றும் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு முதலமைச்சர் பிள்ளையான் நேற்றுப் பிற்பகல் நேரில் சென்று பார்வையிட்டிருக்கின்றார். இந்தச் சூட்டுச் சம்பவம் குறித்து அத்துருகிரியப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பினர் மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் நேற்றுக் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் இடம்பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு கரடியனாறுப் பகுதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் அலுவலகம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர். (எ-3)

## வெளியுறவு...

இந் நிலையில் வெளியுறவு அமைச்சராக ஹிலாரி கிளின்டனை நியமிக்கலாமா என்பது குறித்து அவர் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் வாஷிங்டனில் வியாழக்கிழமை நடைபெற்றது.

அப்போது ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சிலர் அப் பதவிக்கு ஹிலாரி பொருத்தமாக இருப்பாரா? என்பது குறித்து கேள்வி எழுப்பினர். இப் பதவிக்கு மேலும் சிலரின் பெயர்களும் பரிசீலிக்கப்பட்ட போதிலும் ஹிலாரிக்கு அதிக வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகின்றது. (எ-5)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம்...

கருணாநிதி ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த 12ஆம் திகதி இந்த சபையில் ஒரு மனதாக- ஒரே மனதாக ஒரு தீர்மானத்தை தமிழர்களின் இனம் காப்பாற்றப்பட, பாதுகாக்கப்பட, உளத் தூய்மையோடு நிறைவேற்றினோம்.

ஆனால் தமிழர்கள் எப்போதும் எப்படியிருப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக 12 ஆம் திகதி நாம் காட்டிய ஒற்றுமையை 14 ஆம் திகதி மறந்து விட்டு இந்தச் சபையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அதற்காக நான் உள்ளபடியே வேதனைப் படுகின்றேன். நமது இந்தியத் திருநாட்டுக்கு இலங்கை ஜனாதிபதி வந்து பிரதமரையும் மற்ற அமைச்சர்களையும் சந்தித்து வெளியிட்ட கருத்துக்களைப் பற்றித்தான் எதிர்க் கட்சித் தலைவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை இங்கே வெளியிட்டு இதற்கு உனது பதில் என்ன? என்று கேட்டிருக்கின்றனர்.

எப்படியோ என்னை டில்லியில் இருக்கின்ற ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கின்ற ஒருவனாகப் பாவித்து உன் பதில் என்ன? என்று கேட்டதற்காக நான் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

ஆனால் நான் யார்? எனது உயரம் என்ன? என்பதை அறிந்திருக்கின்ற காரணத்தால் அந்த உயரத்திற்கு உட்பட்டு என்ன பதிலைச் சொல்ல வேண்டுமோ அந்தப் பதிலை இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

இலங்கை ஜனாதிபதி சொன்ன கருத்துக்கு உனது பதில் என்ன என்று கேட்கின்ற நேரத்தில் இந்தியா இதனை எப்படி எடுத்துக் கொள்ளப் போகின்றது என்ற கேள்வியும் அதில் அடங்கியிருக்கின்றது என்பதை நான் உணராமல் இல்லை.

இந்தியா எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் இந்தியப் பேரரசுக்கு வேண்டுகோள் விடுக்க தொடர்ந்து கடமைப்பட்டிருக்கின்றோம்.

### பதவி வெறியில்லை

தமிழனுக்கொரு தீங்கு வந்தால், அந்தத் தீங்கைச் சமாளித்துக் கொண்டு, சகித்துக் கொண்டு நாங்கள் பதவியிலேயேதான் இருப்போம் என்று சொல்கின்ற அளவுக்குப் பதவி வெறியில் இங்கு யாரும் தி.மு.கழகத்திலும் இல்லை,

அன்றைக்கு நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே கலந்து கொண்ட தலைவர்களின் கட்சிகளிலேயும் இல்லை என்று நான் கருதுகின்றேன்.

இதற்கிடையில் பல நிகழ்ச்சிகள் இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது முடிந்த முடிபாக ராஜபக்ஷ என்ற இலங்கை ஜனாதிபதி என்ன சொல்லியிருக்கின்றார் என்றால்,

எங்களுக்குத் தீவிரவாதிகளாக இருக்கின்ற விடுதலைப்புலிகளை அடக்குவது, அவர்களைச் சரணடையச் செய்வதுதான் எங்களின் முக்கிய நோக்கம், குறிக்கோள்- அதேநேரத்தில் தமிழர்களை அவர்கள் உலகத்தில் எங்கிருந்தாலும் அந்தத் தமிழர்களைக் காப்பாற்றுகின்ற பொறுப்பை நான் தட்டிக் கழிக்க மாட்டேன் என்று சுவைபடக் கூறியிக்கின்றார்.

அதனை 'சுவைபட' என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அப்படிச் சொன்னால்தான் இங்கிருக்கின்ற தமிழர்களை ஏமாற்ற முடியும் என்று அவர் கருதியிருக்கின்றார். இதனை இந்திய அரசு-மத்திய அரசு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளும் என்று நான் நம்புகின்றேன்.

ஏனென்றால் அவர் இந்த இலங்கைப் பிரச்சினையை இரண்டாகப் பிரித்துக் கொண்டு பேசியிருக்கின்றார். ஒன்று தீவிரவாத அமைப்புக்கு, அதாவது விடுதலைப்புலிகளுக்கு தங்களால் ஆதரவு தர முடியாது என்று இலங்கை ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

அதேநேரத்தில் தமிழர்கள் மீது தங்களின் படை செல்லாது, தங்கள் இராணுவத்தின் குண்டுகள் பாயாது- அவர்களைத் தாக்க மாட்டோம்- தங்கள் சிப்பாய்கள் தமிழர்கள் மீது பாய்ச்சல் நடத்த மாட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

### இந்தியாவுக்கு எச்சரிக்கை

ஆக அவர் இந்த யுத்தத்தை இரண்டாகப் பிரித்துக் கொண்டு தனது கருத்தை வெளியிட்டிருக்கின்றார். இப்போதுதான் நமது இந்திய அரசு மிக எச்சரிக்கையோடு இந்தப் பிரச்சினையைக் கையாள வேண்டும் என்று நான் பணிவன்போடு இந்தியப் பிரதமரையும் இந்திய நாட்டை ஆளுகின்ற ஆட்சிக்கு வழிகாட்டும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற சோனியா காந்தி போன்றவர்களையும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இலங்கை ஜனாதிபதி, விடுதலைப்புலிகளைத் தீவிரவாதிகள் என்று கருதுவாரேயானால் அந்தத் தீவிரவாதிகளை எப்படி அணுக வேண்டும், எப்படி அவர்களை அடக்க வேண்டும் என்பதற்கு வேறு முறைகளைக் கையாள வேண்டும்.

அதேநேரத்திலே தமிழர்கள் மீது குண்டு மாரி பொழிவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். தீவிரவாதிகளாக இருக்கின்ற விடுதலைப்புலிகளோடு அவர்களை அடக்க-அவர்களைச் செயற்படாமல் செய்ய என்ன முறைகள் வேண்டுமோ அந்த முறைகளை அவர் கையாளட்டும்.

அதேநேரத்தில் தமிழர்கள் மீது ஒரு குண்டு, தமிழர்களின் வீடு மீது ஒரு குண்டு, தமிழர்களின் ஆலயங்களின் மீது, தமிழர்களின் இருப்பிடங்கள் மீது, தமிழர்களின் வீதிகளின் மீது, தமிழர்களின் ஊர்களின் மீது ஒரு குண்டு என்று அரசின் சார்பாக- இராணுவத்தின் சார்பாக விழக் கூடாது.

அதற்கு ராஜபக்ஷ உத்தரவாதம் தரத் தயாரா? என்றால், தயாரில்லை. அவர்கள் இலங்கையில் தமிழர்கள் மீது போடுகின்ற குண்டு விடுதலைப்புலிகளின் மீதும் போடப்படுகின்ற குண்டுதான். விடுதலைப்புலிகளின் மீது போடுகின்ற குண்டு தமிழர்களின் மீது போடப்படுகின்ற குண்டுதான். இருவரையும் ஒருசேர அழிக்கத்தான் இந்த யுத்தத்தை ராஜபக்ஷ அங்கே நடத்திக் கொண்டிருக்கின்றார் என்பது நமக்குப் புரியாமல் இல்லை.

அவர் ஏன் அதற்கு கெடு கேட்கின்றார் என்பதும் நமக்கு நன்றாகப் புரிகின்றது. இதில் நாம் ஏமாந்து விடக் கூடாது என்று மத்திய அரசுக்கு இந்த மா மன்றத்தின் சார்பாக நான் எனது வேண்டுகோளை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### தீவிரவாதிகள் எங்கும் உண்டு

ஏனென்றால் அவர்களுக்கு வழி இருக்கின்றது. நமது பிரதமரே இலங்கை ஜனாதிபதிக்குச் சொல்லலாம். உங்களுக்குப் பிடிக்காதது விடுதலைப்புலிகள் தானே, தீவிரவாதிகள் தானே, எல்லா நாட்டிலும் தீவிரவாதிகள் இருக்கின்றார்கள். இந்தியாவிலே இல்லையா? பாகிஸ்தானில் இல்லையா? அமெரிக்காவில் இல்லையா? இங்கிலாந்தில் இல்லையா? தீவிரவாதிகள் இருக்கின்றார்கள்.

அங்கெல்லாம் தீவிரவாதிகள் இருக்கின்றார்கள் என்று அந்த நாட்டு மக்கள் மீதே குண்டு போட்டுக் கொண்டா இருக்கின்றார்கள்? இல்லை. இதனை நமது பிரதமர் நமது நாட்டின் சார்பாக இங்கே ஏங்கிக் கொண்டிருக்கின்ற-வேதனையில் வெந்து கொண்டிருக்கின்ற தமிழர்களின் சார்பாக ராஜபக்ஷவுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதனை அவர் கேட்க வேண்டும். கேட்காவிட்டால் பிறகு என்ன என்பதை யோசிப்போம் என்று அவர் சொல்ல வேண்டும்.

### பதவி விலகத் தயார்

அவர் சொல்லுகின்ற அந்தப் பின்னணியில் நாமும் நமது ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். தமிழினத்தைப் பாதுகாக்கும் நமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள என்னென்ன வழிகள் உண்டோ அவைகளையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில் அறப்போரிலே மட்டுமே நமக்கு அக்கறையுண்டு. அறப் போராட்டத்திலே நாம் இன்று நேற்றல்ல பெரியார் காலத்திலிருந்து-அண்ணா காலத்திலிருந்து ஏன் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி வெற்றி பெற்ற உத்தமர் காந்தி அடிகள் காலத்திலிருந்து அறப் போர் முறைகளை நாம் அறிந்தவர்கள்.

அந்தப் போர்முறையில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முடியும் என்றால் அதற்கு நாம் தயாராக இருப்போம். நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பன்னீர்ச்செல்வம் சொன்னதைப் போல பதவிகளைத் துறக்கவும் தயாராக இருக்கின்றோம் என்று கூறி இந்தளவில் எனது உரையை நிறைவு செய்கின்றேன் என்றார் கருணாநிதி. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.